கோவை முரசு

கோவை முரசு, வெளியீடு: ஆசிரியை S.P.மீனாட்சி அம்மாள்..

கோவைத் தந்தை.

மலர் 3 இதழ் 3	ஜனவரி பொங்கல் மலர் 51	விலை 8 அணா

ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ், பல்லடம்.

ஒரு நாடோடி
நாட்டை ஆள
திட்டம் தீட்டினாள்..
அதற்காக
நெஞ்சிரக்கம்
கொஞ்சமும் இன்றி
அவள் செய்த
வஞ்சகச் செயல்கள்
ஜூபிடரின்
மர்மயோகி
டைரக்‌ஷன்· கே. ராம்நாத்
ஜனவரி 14உ
தமிழ்நாடெங்கும்
முதல் ஆரம்பம்

குரு ராஜா ஜின்னிங் &
ஆயில் மில்ஸ்,

அவினாசி ரோடு கோயமுத்தூர்.

★ உபயோகத்திற்கு உகந்தது

★ குணத்திலும் மணத்திலும் சிறந்தது

★ சுத்தமாகவும் தெழிவாகவுமுள்ளது

★ நல்லமுறையிலே தயாரிக்கப்பட்டது

★ மொத்தவியாபாரிகளுக்கு ஏற்றது.

கடலை எண்ணெயும், பருத்திக் கொட்டையும், கடலைப் புண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

முதல்தரமான விதைப் பநந்திக்கொட்டைக்கு ஏற்ற இட .

விபரங்களுக்கு:-

Prop:- A .G. Guruswamy Naidu & Sons,
Avanashi Road, COIMBATORE.

தந்தி; SWEET'

தி மெஜூரா சுகர்ஸ் & அல்லைடு புராடக்ட்ஸ் லிமிடெட்.

பாண்டியராஜபுரம், (மதுரை ஜில்லா,)

அம்மயநாயக்கனூர்.

ரயில்வே ஸ்டேஷன். கொடைக்கானல் ரோட்.

டைரக்டர்கள்.

திரு பி. டி. ராஜன், பார்-அட்-லா, (சேர்மன்)
,, ஏ. எம். ஏ. அப்துல் காதர் சுல்தான் இப்ராகிம்.
,, எஸ். எஸ். ஞானகுருசாமி கவுண்டர்.
,, ஜெ. ஆர் மார்ஷல்.
,, ஐ. டி. ஒபுளா கொண்டம நாயக்கர்.
,, ஏ. பெரியகருப்பணம்பலம்
,, வி. வி. ராமசாமி.
,, எம். எஸ். சவரிமுத்து உடையார்.
,, ஆர் ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி.
,, என். சண்முகம்.
,, டபிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன்.
,, எஸ். தியாகராஜன்.

நிர்வாக ஏஜண்டுகள்,

மெஸர்ஸ். பாண்டியராஜன் அண்டு கம்பெனி Ltd.

பாங்கர்கள்,

சென்ட்ரல் பாங்கு ஆப் இந்தியா லிமிடெட், மதுரை,
இந்தியன் பாங்கு லிமிடெட், மதுரை.
பாண்டியன் பாங்கு லிமிடெட், மதுரை.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

பாண்டியராஜபுரம், அம்மயநாயக்கனூர் போஸ்டு.

(மதுரை ஜில்லா)

இந்த ஆலை 1950 ஜனவரி முதல் வேலை ஆரம்பித்து தமிழ் நாட்டின் தென்பகுதியின் தேவைக்கு உதவுகிறது.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,

மதுரை – தூத்துக்குடி – அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்	நாங்கள் சப்ளை செய்வது	நெம்பர் 80 வரை நூல்கள்

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல்
தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள்,
இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள்,
கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற
மடக்கு இரட்டை நூல்கள், மற்றும்
பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற
மிருதுவான சன்ன நூல்கள்.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

ஸ்தாபிதம்: 1888.

தி கோயமுத்தூர்

ஸ்பின்னிங் வீவிங் கம்பெனி லிமிடெட்

கோயமுத்தூர்.

த. பெ. எண். 24.

தந்தி: 'ஸ்பின்வீவ்.' போன்: 70.

அதிகாரம் பெற்ற மூலதனம்	25.00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	20,76,900
வேலை செய்யும் கதிர்கள்	52,006
அமைக்கப்படும் கதிர்கள்	20,480
வேலை செய்யும் கதிர்கள்	400

20 நிர். முதல் 100 நிர். வரை எல்லா ஒற்றை, இரட்டை நூல்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உயர்ந்த ரக வேஷ்டிகள், துண்டுகள், சட்டை துணிகள், லாங்கிலாத்துகள், பின்னல் துணிகள், தாயாரிக்கப்படுகின்றன.

தென்னாட்டிற்கே முன்னோடியான தொழிற்சாலை,

ஏஜண்ட்ஸ் அண் செக்ரட்ரீஸ்:-

மெஸ்ஸர்ஸ் R. G. S. நாயுடு அண் கோ

"கோவை முரசுக்கு" வாழ்த்து.

P. S. Kumaraswami Raja,
CHIEF MINISTER OF MADRAS.

ST. FORT GEORGE,
MADRAS,
27-8-50

ஸ்ரீமதி மீனாட்சி அம்மாள் அவர்கட்கு,

தாங்கள் அனுப்பிய "கோவை முரசு" மாதப்பத்திரிகையின் ஜுன் மாத வெளியீட்டைப் பார்க்கச் சந்தோஷம். இப்பத்திரிகை மக்களுக்குப் பயன்படும் வகையில் அநேக புனிதமான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், எல்லோராலும் வரவேற்கப்பட்டு செழித்தோங்கும் என்று மனப்பூர்வமாக நம்புகின்றேன். பத்திரிகை வெற்றியுடன் நடைபெற என் நல்வாழ்த்துக்களை அறிவிக்கின்றேன்,

தங்கள்.
P. S. Kumaraswami Raja,

Karumuthu Thiagarajan.

Madura,
23—10—50.

கோயமுத்தூரிலிருந்து வெளிவரும் "கோவை முரசு" பத்திரிக்கைப் பிரதி ஒன்றைக் கண்ணுற்றேன். தமிழ் நாட்டில் இப்போது பொதுமக்களிடையே பத்திரிகை வாசிக்கும் வழக்கம் பெருகியிருப்பது மகிழத்தக்கது. உயர்திரு மாணிக்கனாருக்குள்ள ஆர்வத்தை நோக்கின், அவர் நடத்தும் பத்திரிகை நம் நாட்டிற்கு சிறந்த முறையில் அரிய தொண்டாற்று மென்பதில் ஐயப்பாடில்லை. மக்கள் முன்னேற்றத்தில் விருப்பமுள்ளவர்கள் யாவரும் இதுபோன்ற நற்காரியங்களில் ஈடுபடுகிற இளைஞர்களுக்கு போதிய ஊக்கம் அளிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

"கோவை முரசு" தமிழகத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டி நன்கு முழங்க இறைவன் அருளை வேண்டுகிறேன்.

கருமுத்து. தியாகராசன்.

V. C. PALANISWAMI GOUNDER, M. L. A.

Vellakkinar. PO,.
COIMBATORE.
21—12—50.

"கோவை முரசு" நிர்வாக ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்களுக்கு தாங்கள் நடத்திவரும் "கோவை முரசு" பத்திரிகை, தேச சேவை முதலிய உன்னதமான நோக்கத்துடன் பிரசுரம் செய்யப்படுவதால் ஷை பத்திரிகை மேன்மேலும் புகழடைந்து முன்னுக்கு வரவேணுமென்று என் மனமார்ந்த ஆசியைதெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

V. C. பழனிச்சாமிக் கவுண்டர்,

கோவை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர்

S. கணேசன் M. A. B. L..

195, பாலேஸ் ரோடு,
மதுரை.
26—9—50.

உயர்திரு ஆசிரியர் "கோவை முரசு" அவர்கட்கு, தங்களுடைய கோவை முரசை வரப்பெற்றேன். அது ஒரு சிறந்த தமிழ்ச் சஞ்சிகை, சிறந்த கட்டுரைகள் நிறைந்தது தமிழனின் பண்பையும் கலாச்சாரத்தையும் உயர்த்தும் நிலைமையில் அமைந்திருக்கிறது. தாங்கள் அச்சமின்றி தமிழ் மக்கள் உய்யுமாறு சிறந்த சேவை செய்வீர்களென்று பெரிதும் விரும்புகிறேன். வாழ்க கோவை முரசு.

தங்களன்புள்ள,

சு. கணேசன்.

'கோவை முரசு' அச்சக உதவி நிதி!

அன்புடையீர்!

நமது பத்திரிகை மாதந்தவருமல் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றுல் சொந்த அச்சகம் மிக மிக இன்றியமையாதது. எவ்விதத்தில் உழைப்பினும் சொந்த அச்சகமில்லாதிருப்பின் சஞ்சிகையைச் செவ்வனே நடத்தமுடியாதென்பது நாம் மூன்ருண்டு பத்திரிகை நடத்திய அனுபவம் நமக்குக் கூறுகிறது. ஆக, ஆதரவாளர்கள் செங்குந்த சீலர்கள், பொதுநலப்பிரியர்கள், தங்களாலியன்ற நன்கொடையளித்து நம்மை ஆதரிப்பார்களெனக் கோருகிருேம். ஆசிரியர்.

பழையகோட்டைப் பட்டக்காரர்,

உயர்திரு நல்லசேனுதிபதி மன்ருடியார் அவர்கள்	ரூ.	250/-
,, W. P. A. சௌந்திரபாண்டியனுர், மதுரை	ரூ.	200/-
,, P. நாச்சிமுத்துக் கவுண்டர் (A.B.T.) பொள்ளாச்சி	ரூ.	200/-
,, T. R. சுந்தரம் பிள்ளை B.A., B.L. கோவை	ரூ.	100/-
,, A. S A. சாமி, B. A (Hons) கோவை	ரூ.	100/-
,, Y. C. சந்திரசேகரன் C. C. Bus Service, சூலூர்		100/-
,, V. L. பாலகிருஷ்ணன், கோவை,	ரூ.	100/-
,, P.R.கந்தசாமிக் கவுண்டர், M.L.A. பொள்ளாச்சி		100/-
,, P. A. ராஜூ செட்டியார், கோவை,	ரூ.	100/-
,, G. கிருஷ்ணன், C. S. & W. மில்ஸ் கோவை,	ரூ.	100/-
,, தி ஜூபிடர் பிக்சர்ஸ், சென்னை	ரூ.	100/-
திருமதி U. R. ஜீவரத்தினம், கோவை,	ரூ.	100/-
திரு. M. A. A. இரத்தினசாமி நாடார், விருதுநகர்,	ரூ.	50/-
,, N. வீராசாமி செட்டியார், மேட்டுப்பாளையம்,	ரூ.	50/-

முகவரி:–

ஆசிரியர் 'கோவை முரசு' C/o பாலு பிரஸ்,

சூலூர் P. O (கோவை ஜில்லா)

கோவை
முரசு

மடமையை மாய்த்து நாளும் மனிதரை மனிதராக்கி
மாநிலத்தெங்கும் நாங்கள் மன்னராய் வாழ்வோம் என்றும்.

மலர் 3 | ஜனவரி 51 | இதழ் 3

பொங்கல் வாழ்த்து

ஐம வழி நீங்க தையது பிறந்தது என்பது பழமொழி: தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது இந்நாட்டு வழக்கச்சொல். உழுதூண் வினைஞர்கள் உவப்புறும் திங்கள் "தை" காலநிலை மாறுதலுற்று காசினி உவக்கும் நாள் துவக்குகிறதென மக்கள் களிப்படைந்து காலவெப்பத்தை தந்தருளியகாலைச் சூரியனுக்கு விழா செய்யும்பெருநாளை தமிழர் பொங்கல் நாளாகக்கொண்டாடுவது வெகு நாளைய வழக்கம். கன்னலும், செந்நெல்லும் முக்கனியும் பாலும், மஞ்சளும், மலரும், செந்தேனும், திருவிளக்கும் மங்கலப்பொருள்கள். அவற்றை வைத்து கதிர்க்கடவுளுக்குப்படைத்து பசியும், பயப்பிடையும், நீங்க பூசனை புரிவது பழந்தமிழ் மரபு.

பொங்கல் புது நாள் தமிழகத்தில் ஆரம்பிக்கிறது சென்ற ஆண்டு மிகச்சோதனையாக இருந்தது. எத்தனையோ இடைஞ்சல்களும், இன்னல்களும் சுமந்த படகாகக் கடந்த

ஆண்டு காட்சியளித்தது சுண்ணும்பு நிறைந்த சுரங்கமாக இருந்த காலம் மாறி சுவர்ணப்பொக்கிஷமாக இனிவிளங்க இந்தத் தைப்பொங்கல் பிறந்ததா? அப்படித்தான் விளங்க வேண்டுமென எவரும் விரும்புவார்! அப்படியே விளங்கட்டும்.

நாட்டில் பொருளாதார நலிவும், பஞ்சமும், பட்டினிச் சாவும் பெருகி வருதல் கண்கூடு. பொங்கல் பிறந்து அறுவடையான மாசூலைக்கொண்டு சிலகாலம் விவசாயிகள் குதூகலிக்கலாம், நிரம்பிய வயிறு காரணமாக அவர்களும் வாளாயிருக்கலாம். உண்டிசுருங்கும்போது மக்களின்மன நிலை மாறும். காலம்கசப்பளிக்கும். சுருங்கக்கூறின் விபரீதம் விளையாடும். இது இயற்கை. குறிப்பிட்ட நாட்கள் வரை குதூகலிக்கும் மக்கள் காலக்கல்லை செதுக்கி நூதன வேலைப்பாடமைந்த நற்சிலையாக மாற்றஎண்ணிடார். மந்த வயிறு காரணமாக மஞ்சமும், மனைவியும் மக்களுமே உலகமென்றெண்ணுவர்,அதுதேவை. இதுவேண்டும் வாழ்விற்கு என்றபோது குறும்புகள் கொப்பளிக்கும். பொங்கல் விழாக் கொண்டாட்டம் அப்பொழுதுதான் மங்கி மறையும். தன் நிலை உணர்ந்த மக்கள் இன்னலையறுத்து கல்லைப்புதுப்பித்து, கண்டோர் மயங்கும் நற்சிலையாக நாட்ட அப்பொழுதுதான் எண்ணுவர். அல்லல். கொந்தளிப்பு, குமுறல் தமிழகத்திலேற்படா வண்ணம், ஆட்சியாளரும், மக்கள் பெருந்தகையரும் தடுப்பாரென எதிர் பார்க்கிறோம். பொங்கல் விழா நடத்தும்போது நமக்கு அந்த எண்ணந்தான் தோன்றுகிறது.

"பொங்கல் விழா" கொண்டாடுவதேன்? அதன் பெருமை என்ன? என்றவினைக்களுக்கு பல ஆண்டுகளாக நமது விற்பனப்பத்திரிகைகளின் சகோதர ஆசிரியர்கள் விதவிதமான கருத்துக்கள் தந்துள்ளனர். அதனைலதனை இங்கு மீண்டுமெடுத்து கூறுது நிற்கிறோம். நிற்க.

நமது "கோவை முரசு" மூன்றுவது ஆண்டு பொங்கல் ஒலியைப்பிறப்பித்திருக்கிறது. சென்ற பொங்கல் கோவை முரசு ஒலிக்கும், இந்த பொங்கல் ஒலிக்கும் வித்தியாசமதிகமில்லை ஆனல் அந்த ஒலி செய்த மாறுதல்களில் பல மாறுபாடுண்டு. அதன் முயற்சியிலும், பலனிலும், நமது முரசு வெற்றிகண்டதென நாக்கூசாமல் நம் எதிரியும் கூறுவர்.

திரு. V. S. லக்ஷ்மணன் அவர்கள்.

திரு. V. S. லக்ஷ்மணன் அவர்கள்,

சாரதா மில்ஸ் மானேஜிங் ஏஜண்டு,

கோயமுத்தூர்.

செந்தமிழைச் செழுந்தமிழாய் செய்யவேண்டும் என ஒரே ஆர்வத்தால் உள்ளோங்கி தமிழ்ச் சேவை செய்யும் தகைசான்ற தாக்காரான உயர்திரு. செங்கோட்டையா அவர்களின் அருமைப் புதல்வர்தான் இப்பக்கத்தில் பெருமையுடன் பிரகாசிக்கும் திரு. லக்ஷ்மணன் அவர்கள் ஆவார்கள்.

ஆண்டில் இளையராயினும் அறிவில் நிறமையில் முதியவரினும் முதிர்ந்தவராவார். கட்டிளைஞரான இவர் கன்னித் தமிழர், கோவையின் கௌரவ மாஜிஸ்டிரேட் & வைஸ் பிரசிடெண்டு, இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸின் செயலாளர். ரெயில்வே அட்வைசரி கமிட்டியின் உறுப்பினர், ஆல் இந்தியா ஊப் இன்சூரன்ஸ் கம்பெனி (பாம்பே) யின் டைரக்டர், கொச்சின் பர்டிஊசஸ் கம்பெனியின் டைரக்டர், ஸ்ரீ சாரதா மில் (கோவை)யின் மானேஜிங் ஏஜண்டு.

செந்தமிழ் கமழும் செங்குந்தர் மரபினற்கோர் அரிய மணியாக விளங்கும் லக்ஷ்மணன் அவர்கள் கூர்ந்த மதியும் வியாபார நுணுக்கமும், காலத்தின் தன்மையும் செவ்விய முறையில் அறிந்தவர். இதமாகப் பழகும் பண்பும், இதழ் விரிந்த சிரிப்புடன் வரவேற்கும் தன்மையும், பிறரைக் கவர்வதில் இணையற்ற அம்சமாக அவருக்கு அமைந்துள்ளன. ஆலைத் தொழிலின் அனுபவ மின்னும் விரிந்த முறையில் தெரிவான் கருதி மேனாடு செல்வதற்கு எத்தனித்துள்ளார். விரைவில் மேனாடு சென்று விரிந்த ஞானத்தோடு விஞ்ஞான ரீதியில் ஆலைத் தொழிலை வளர்க்க அவர் பயணம் விரைவிலேற்பட்டு வெற்றியளிக்க வேண்டுமென்பதே நம் விழைவு.

எல்லா நலனும் பெற்ற செல்வரான லக்ஷ்மணன் சிறந்ததோர் வழிகாட்டியாக செங்குந்தர் மரபினரிடை விளங்குதல் போல தமிழ்த் தாயின் தன்னேரில்லா சான்றாமைப் புதல்வராக விளங்க நிடிய வாழ்வுடன் நீண்ட நாள் வாழப் பெரிதும் விழைகிறோம்.

பொதுநலச் சீலர்கள் பெரிது வாழ்க !

சுவரொட்டிகளும், பிரசுரத்தாள்களும், பிரசங்க மேடைகளும். சிறப்பாக கோவை மாவாட்டத்திலும் பொது வாகத் தமிழகத்திலும் செய்த கிராமசேவையை விட 'கோவை முரசு' செய்த சேவை பெரிதென துணிந்து கூற ஆசைப் படுகிறோம்.

பணம் நமக்கு லக்ஷியமல்ல, பொதுமக்கள் சேவையே நமது கொள்கை, அரசியல் போட்டிக்காகவோ, தேர்தலுக்காகவோ, நமது பேனா இதுவரை நடனமாடவில்லை என்பதை பொங்கல்விழாக்கொண்டாடும் நேரத்தில் பூரிப்புடன் கூற ஆசைப்படுகிறோம். இனியேனும் அமைதியும், சுபிக்ஷமும் தமிழகத்தில் நிரந்தரமாக நிலைக்க பொங்கல் பொங்கட்டும்.

பொங்கும் மங்களம் எங்கும தங்குக.

பங்கு கேட்கக்கூடாதா?

நாம் நம் வரும்படியைச்செலவு செய்து—நமது வீட்டை விற்று நம் மக்களைப்படிக்க வைக்கிறோம். சர்க்கார் உத்தியோகங்களில் பங்கு கேட்டால் அது தேசத்துரோகமா?

—பெரியார்

தந்தி: "பேமஸ்" போன்: "459"

சிறந்த ஜவுளி ரகங்களுக்கு

நம்பிக்கையான இடம்

★

P. A. ராஜா செட்டியார் & கோ.,

ராஜ வீதி—கோயமுத்தூர்.

மறை நிறைந்தது! மலை மறைந்தது!

பகலாற்றி வந்த பகலவன் காரிருள் கவ்வப்பட்டதால் உலகம் ஒளியிழந்தது. ஒளியிழந்ததேயன்றி இருள்— போர்வையால் அது மூக்காடிடப்படவில்லை. காயுங்கதிரொளி கவின் பெறுமின்பத்தை அளித்து உயிர்களைப் பணியில் ஈடுபடுத்தி ஊக்குவித்துக்கொண்டிருக்கும் போது திடுமென மப்புகள் மந்தை மந்தையாக வானத்தில் மேய்ந்து கதிர்காட்டையழித்தது. சில்லெனும் வாடைக் காற்று மக்களுக்குச்சோம்பல் உணர்வை தந்து வேலையினின்றும் ஒதுங்கியிருக்குமாறு செய்த ஊனச்சூழ்நிலை போல செந்தமிழ் நாட்டு திருவளர் மலை சாய்ந்தது. மலை சாய்ந்ததேயாயினும் மலையில் மறைந்துகிடந்த மாணிக்கங்கள் மறையவில்லை.

தனித்தமிழ் வேண்டும். தனித்தமிழரசு தமிழர்க்கு வேண்டுமென அல்லும், பகலும் பாடுபட்டு தமிழேஉயிராய் கொண்டு வாழ்ந்த பெருந்தகையண்ணல் பல்லாவரக்குரிசல் உயர்திரு. மறைமலையடிகள் தமது எண்பதாவது வயதில் தமிழன்னை குடல் சரியவும், தமிழ்ப்பெருமக்கள் அழுது அலறும்படியும் திடுமென இயற்கையிற் ஒன்றினரெனக் கேட்டபோதிலும்அவரைநினைக்கும்போதிலும்கண்கள்குளமாகிக் குருதியைக்கொட்டிய வண்ணமாக உள்ளன. மறைமலையடிகளார் தமிழுக்கும்தமிழர்க்கும்தமிழகத்திற்குசெய்த சேவைகள் செம்பொன் எழுத்துக்களால் எழுத வேண்டியவையாகும். எதிரிகள் கோடி ஒன்றுபட்டு தமிழின் ஆக்கத்தைத்தவிடுபொடியாக்க முனைந்தபோது தனி ஒருவராக நின்று எதிரிகளின் வைரநெஞ்சைப்பிளந்து தமிழ்க்கொடி உயர்த்திய தனிப்பெரும் வீரராக விளங்கினர். அடிகளார் வடமொழி பயின்றவர், ஆங்கிலம் அறிந்தவர், இலத்தீன் உணர்ந்தவர், பன்மொழிப்புலமை பெற்ற பாவாணர், நல்லிசை மணக்கும்படி சொற்சுவையளிக்கும் நாவலர், திறம்பட ஆராயும் நுண்ணறிவாளர், காலச்சிற்பியான கன்னித்தமிழ் அடிகளார் தமிழினை இகழ்ந்தாரைஅறிவுச்செருவில் வலுவில் மல்லுக்கிழுத்து வாகை கொண்ட வண்டமிழ் வேந்தராவார்.

இந்நாளையில் தமிழுலகில் அவரளவிற்கு நூற்புலமையும் நுண்ணறிவுடன் ஒரு பொருளை விளக்கும் ஆற்றலும்,

எவர்க்கும் கிடையாதெனத்துணிந்து கூறலாம். தமிழன் தன்னுரிமைக்காக போராடுமின்னலையில் அடிகள் திடுமென மரணமுற்றது தமிழுலகத்திற்கு ஈடு செய்யமுடியாத ஒரு நஷ்டமாகும்.

கடைசிப்பயணம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பது மறுக்கமுடியாததேயாயினும் அடிகளார் மரணம் ஒரு ஐந்தாண்டுகளுக்குப்பின்னர் நிகழ்ந்திருப்பின் தமிழகம்சிறந்து விளங்க ஏதுவுண்டு என்பதை நினைக்க நெஞ்சம் பதறுகிறது பல நூல்களை எழுதித்தந்த பாவரசர் இயற்கையுடன் ஒன்றிக்கலந்தார். தனித்தமிழால் பேசி, எழுதி, தனித்தமிழ் வாழ்க்கையைக் கையாண்டு முடிவுற்று மலை மறைந்தது. அவர் தந்த மறை தமிழற்கு ஆக்கந்தந்து மறுமலர்ச்சி பாதையில் தமிழனை அழைத்துச் செல்கிறது. மறைமலையடிகளாரின் நூல்கள் யாவும் தமிழற்கு மறைகளாகும். மறையை நாலுடம்பாக்கி நம்மிடம் நடமாடவிட்டு. மலைமறைந்துவிட்டது. மலை சாய்ந்தபோது அவரளித்த மறை குன்ருக இருக்கிறது. குன்ருக இருக்கும் மறைமலையடிகள் தமிழற்கு அறிவுறுத்திய வழிகள் நமக்கு மறையாக விளங்குகின்றன. அவற்றை உயிரினும் மேலாகக்கருதி ஒழுகுவோமாளுல் உரிமையெலாம் நமைச்சாரும், பாரிலுள்ள பரிவாதமனைத்தும் பட்டுச்சாகும்.

மலை மறைந்ததாயினும் மறை நிறைந்துள்ளது. நிறை மறையின் நேரிதச் சொற்படி நினைவு குன்ருவண்ணம் செய்வன செய்தால் சீலமும் சிறப்பும், நன்மை உண்டுஅதுதான் மறைந்த மாவீர அண்ணலுக்கு நாம் செய்யும் கைமாருகும்.

வாழ்க மறைமலையடிகளாரின் வளர்திருநாமம்!

ஓங்குக அவர்தம் உயரிய செந்தமிழ் நெறி!!

ஏழைக்கு ஏது?

"உடையவனுடைய பொருளைக்காக்க எல்லா போலீசும், எல்லா நீதியும், எல்லா சேனை சிப்பந்திகளும் ஏற்பட்டுள்ளன! ஆனல் இல்லாதவனின் வறுமையைப் போக்க எந்த நியாயம், எந்தச்சட்டம், எந்தஅரசு, ஏற்பட்டுள்ளது?

-ம. சிங்காரவேல்.

இன்னிசைக்குயில்

திருமதி U. R. ஜீவரத்தினம் அவர்களின் இனிய இசைவிருந்து.

—«§§§§§§»—

திருமதி. U. R. ஜீவரத்தினம்.

கோவை ராயல் தியேட்டரில் கடந்த திங்கள் கோவை சாரதா மில்ஸ் அதிபர், உயர்திரு **V. S.** செங்கோட்டையா அவர்களின் தலைமையில் இன்னிசைக்குயில் திருமதி **U. R.** ஜீவரத்னம் அவர்களின்— இனிய இசைவிருந்து மிகு விமரிசையாக நடந்தேறியது. அம்மையார் அளித்த இசை விருந்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்குகொண்டு செவிச்சுவை பெற்றுக் களித்தனர் அம்மையாரின் அரிய இசை விருந்தைப்பாராட்டிப்பலப்பல பரிசுகள் ரசிகப்பெருமக்களால் வழங்கப்பட்டன.

இசைவிருந்து விழாவிற்குத்தலைமை வகித்தவர் தலைவர் திரு. செங்கோட்டையா அவர்கள் அம்மையாரின் இசைவிருந்தைப்பற்றிப்பேசுங் காலத்தில்:— "திருமதி ஜீவரத்னம் அவர்கள் இசைப்பயிற்சி பெரிதும் படைத்தவர்; திறம்பட நடிக்கும் ஆற்றல் அமைந்தவர்; உணர்ச்சியுடன் உரைகளைப்பேசுவதில் மிக வல்லவர். இவர் இயல் இசை நாடகம் என்ற முத்தமிழிலும் பயிற்சியுடையாரென்பதை இவர் நடித்த பல படங்களைக்கண்ணுற்ற யாவரும்— ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமாகும். இத்தகைய ஆற்றலமைந்த அம்மையாரை முத்தமிழ் கலா வித்தகியாரென அழைப்பதே சிறந்ததென்பதுஎன்எண்ணம். முத்தமிழ் கலா வித்தகியாரான திருமதி— U. R. ஜீவரத்தினத்தின் இசைவிருந்துகள் நமது மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட வேண்டும். தமிழிசை வானில் புதியதோர் மின்னொளியாகத்தோன்றியுள்ளன ஜீவரத்தினம் அவர்களின் இசை ஒளி தமிழ் நாடெங்கும் பரவ வேண்டுமென்பதே என் வேட்கை"

தலைவர் திரு. செட்கோட்டையா அவர்கள் கூறியது புகழ்ச்சியன்று பொதுப்பணிக்காகவும், திருமணம் போன்ற விழாக்களுக்காகவும்,— இசைக்கச்சேரி நடத்தும் அன்பர்கள் அம்மையாரின் இன்னிசை விருந்தைபயன்படுத்திக் கொள்வார்களென எதிர்பார்க்கிறோம். ரசிக ரஞ்சிதம் மிகப்பெற்று சுக சாரீரம் வாய்க்கப்பெற்ற அம்மையாரின்— கலைத்திறன் கதிர்விட்டோங்குக!

தமிழ்த் திருவிழா.

கோவை.

முடியுடை வேந்தர் மூவர் ஆண்ட பெருநிலப்பரப்பான இத்தமிழகத்தில் செல்வத்திலும், சீரிலும், வீரத்திலும் மிக்குற்று விளங்கியது சேரநாடு. அச்சேரநாட்டின் பெரும் பகுதிகளில் ஒன்றாகக் கொங்குநாடு தலைநாளிலேயே பல சிறப்புகளுடன் விளங்கிற்று. கொங்கலரும் கொங்குநாட்டிலே கோவைப்பதிஇன்று தொழில் வளத்தால் உச்ச நிலையில் மின்னுவது என்பது மாற்றாரும் மறுக்கமுடியாத உண்மை. ஒரு மொழி வைத்துலகாண்ட நெடுஞ்சேரலாதனுண்ட சேரநாடானது என்றும் தமிழைப்பேணுவதில் பின்வாங்கியதில்லை. மதுரமிகுந்த மதுரைத்தமிழ் மாவரசன் பாண்டியன் காலத்திற்குப் பின் ஆலவாயில் செங்குருத்தென தழைக்கவோ; ஆலெனப் பரந்து விரியவோ யில்லை தமிழுக்குத் தனி மெருகு தந்த பாரதியார் காலத்திலிருந்து தமிழுக்குத் தனித் தோரிடந்தந்து அதனைப்பேணி வளர்க்கத் தன் முழு மூச்சையும் கோவை செலவிட்டது; செலவிட்டுக்கொண்டுமிருக்கிறது. என்றும் செலவிடும்! புது யுகத்து விடி வெள்ளிகளாகக் கருதத்தகுந்த பலவேறு துறையில் பழுத்த அறிவுடைய பண்பாடமைந்த பல அறிஞர்களை இன்றும் கோவை தன்பால் வைத்து தரணீமெச்சும் நிலையில் விளங்குகிறது தமிழ்த்துறைக்கு:-C. K. சுப்ரமண்ய முதலியார், C.M.இராமச்சந்திரன் செட்டியார் போன்றபழுத்த அறிஞர்கள் பலர் பிறந்த மூதூர்; விஞ்ஞான துறைக்கு G. D. நாயுடு போன்ற அறிவின் மிக்கார் வாழுமூர் பொருளாதார துறைக்கு:-R. K. ஷண்முகம் போன்றாரிருக்கும் ஊர். இன்னும்பல்வேறுதுறைகளில்பல்வேறு கருத்தில் நுண்ணிய அறிவு படைத்த மேதைகள் மேவிய ஊர் கோவை யெனக் கூறலாம்

அத்தகைய ஒப்பிலாத் திப்பிய பதியிலே கோவைத் தந்தையெனவிருதுபெற்றவீரர் உயர்திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் வரவேற்புத் தலைவராகயிருந்து மூன்றாவது தமிழ்த் திருவிழாவை கோவை அரசியல் கலைக் கல்லூரியில் சிறப்பாக நடத்தி தமிழகத்தில் தமிழை வளர்க்கப் பல அறிஞர்களின் கருத்துரைகளைத் திட்டமாக்க முனைந்த அவர் தம் முயற்சி தமிழ் மொழி வரலாற்றிலே பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தகுந்தவை யாகும்.

இனிமையும் நீர்மையுங் கொண்ட தமிழ் மொழி வளரக் கொண்டாடிய தமிழ்த் திருவிழாவிற்கு செட்டிநாட்டரசர் முத்தையா அவர்கள் திறப்புவிழா ஆற்றவும் சென்னை—மாநில முதலமைச்சர் கனம் P.S. குமாரசாமியார் தலைமை ஏற்கவும், நீதிநூலறிஞர் ஆர். கே ஷண்முகனாரும் தமிழ் பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளையும், தமிழ் வெறி மிக்குற்ற மா. பொ. சிவஞானமும், சொற்பொழிவாற்றவும் தமிழ்த்திருவிழா சுடரொளித் தாரகைபோல் பொன்—னொளி சான்றியது.

இம்மாபெரும் விழாவிற் கலந்தோர்க்கு சுவையூண் நல்கிய பழைய கோட்டைப் பட்டக்காரர் உயர்திரு நல்ல சேனாபதி மன்றாடியார் அவர்கள் பெருமுயற்சியும் மறக்கப் பாலதன்று. சிறப்புற நடந்தேறிய இவ்விழாவை-கூட்டிவைக்கத் தனதுமுதுமையிலும் தளராது வினையாற்றிய C. S. இரத்தினசபாபதியாரின் அருமுயற்சியை தமிழ் பற்றுடையார் எவரும் நாவார வாழ்த்தாமலிருக்கவியலாது.

தமிழைப் பேணுதலே தமிழனின் கடமை
தமிழை வளர்ப்பதே தமிழனின் உரிமை
தமிழைக் காத்தலே தமிழனின் தொழிலாம்
தமிழை யிகழ்வோர் தறுதலை யாவர்

தமிழே உடலாம்! தமிழே உயிராம்!!—எனத் தனது தள்ளாத வயோதிகத்திலும் பாடுபட்டு இப்பெரு விழாவை நடத்தித்தர முயற்சியிலீடுபட்ட இரத்தினசபாபதியாரின் தமிழ்க் காதல் அரும்பெரும் முயற்சி தான் இத்திருவிழாவிற்கு வித்தெனத் துணிந்து கூறலாம். இத்திருவிழாவிற்கு செயலாளராக இருந்த திரு. T. R. சுந்தரம் பிள்ளை, B. A., B. L., அவர்களின் கடின உழைப்பைப்பற்றி வர்ணித்தால்வார்த்தைகள் தான் மதிப்புறுமே என அஞ்சியே இத்துடன் நிறுத்துகிறோம்.

தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!! தமிழகம் வாழ்க!!!

அன்றே செய்தார்கள்

ஆதி திராவிடர் (பஞ்சமர்) பொதுத் தெருவில் நடக்கலாம் என்று உத்திரவு போட்டவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார். G. O. நெ. 2660 டி. 25–9–24 சகலமான பொதுரஸ்தாக்களிலும் சகல ஜாதியாரும் உயர்ந்த ஜாதியருக்கு உள்ள உரிமைப்படி நடந்து போகலாம்.

பொங்குக இன்பம்.

வீடுகள் தோறும் விளைபொருள் நிறைந்து.
ஆடையும் பிறவும் அகவிலை குறைந்து
பஞ்சம் என்பது கொஞ்சமும் இன்றி
கொஞ்சும் மகிழ்வுடன் யாவரும் குலவிட
பகையும் போரும் பழிகளும் நீங்கி
அகிலம் முழுதும் அன்பறம் ஓங்கி
காந்தி மகாத்மா காட்டிய நன்னெறி
சாந்தம் தழைத்து சத்தியம் மலர்ந்து
இன்பம் கனிந்து இங்கிதம் பொங்கிட
பொங்கல் திருநாள் மங்களம் பொங்குக!

—நாமக்கல் கவிஞர்.

முகப்புப்பட விளக்கம்.

கோவைத் தந்தையெனக் கருதப்படும் திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்களின் திருவுருவப்படம் நமது முரசின் முகப்பை அலங்கரிக்கிறது. திரு முதலியாரவர்கள், கோவை நகர வாசிகளுக்கு செய்த சேவைகள், கோவை நகர சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை. மும்முறை கோவை நகராண்மைக் கழகத்திற்கு தலைவராக யிருந்து ஆற்றிய பணிகள் பலப்பல. கல்விச்சாலைகள், சிறு பூஞ்சோலைகள் (Park) சுகாதார வசதிகள் இன்னும் பிற கோவை நகரத்திலேற்படுத்தி மாகாணத்தில் அறியதோர் அழகு நகராக்கிய பெருமை முதலியாருக்கே சாரும். முதலியார் அவர்கள் பலதிறப்பட்ட பொதுப்பணிகளில் பங்கெடுத்து கரவற்ற மனதுடன் பணியாற்றிய கர்மவிரர். ஜில்லா போர்டின் தலைவராகவும் சட்டசபை உறிப்பினராகவும் [M. L. A.] பல ஆண்டுகள் தொடர்ச்சியாகயிருந்து சேவை செய்த சீலர். சிறுவாணி தண்ணீர் தேக்கம் சென்னை மாகாணத்தில் சரித்திரப் பிரசித்திபெறசெய்தபெருமை முதலியாருக்கே தகும்.

நமது கோவை முரசு இன்று இரண்டாவதாண்டு கொண்டாடி, மூன்ருவதாண்டு பொங்கல் மலர் துவங்குகிறதென்ருல் முதலியார் அவர்களே அதற்குக் காரணம். அத்தகைய பெரியார் பல்லாண்டு வாழ்ந்து பொதுநலப்பணிகள் பலவற்றிற்கு உயிர்கொடுத்து உணர்வூட்டுவாராக!

Phone { Office 105
Residence 47 }

SRI SARADA MILLS LTD.,

PODANUR. (COIMBATORE.)

MANAGING AGENTS & SECRETARIES

V. S. SENGOTTAIAH & BROS.

SPINDLES	14,000	Looms 170
,,	7000 (Ordered further)	

YARN — From 10s to 60s (Special Counts) Single & Double yarn.

WEAVING — All kinds of Grey Long Cloth Dhoties, Towels, Shirtings. etc., are manufactured. Our special qualities are 1001 and 1011 Grey Long Cloth, which are noted for their excellence in quality.



துளசிச் செடி நாட்டினால் உணவுப் பஞ்சம் தீருமா?

உணவு உற்பத்தி பெருகுமா?

கோவை V. L. பாலகிருஷ்ணன்.

உணவு உற்பத்தி பெருகுமா என்பது சந்தேகந்தான். இதற்குரிய காரணங்கள் பல அவை மக்கட் பெருக்கமும், மழையின்மையும், நீர்பாசன வசதிகள் போதாமையும், தேவையிருந்தும் வெளிநாடுகளிலிருந்து உணவு பொருள்களை இறக்குமதி செய்யாமையும், நிர்வாகத்திறமை போதாமையும் அதன் காரணமாக ஏற்பட்ட சர்க்கார் ஊழல்களுமேயாகும். உண்மை இவ்வாறிருக்க காரணமல்லாதவற்றைப்— பேசிக்காலத்தைவீணாகக்கழிப்பதை விடப்பதவியை விட்டு விடுதலே நேர்மையாகும்.

மக்கட்பெருக்கத்திற்கும், நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமைக்கும், காரணங்களை ஆராய்ந்தறிந்து— ஆவன செய்தலே முறை, அதை விடுத்துத்திட்டங்கள் ஏட்டளவில்— தீட்டி விட்டுச்செயலில் கொண்டு— வராமல் ஊர்ஊராய்ச்சுற்றுவதால் உணவு உற்பத்தி பெருகிவிடாது. தற்பொழுது சர்க்கார் போட்டிருக்கும் தம் திட்டங்களைச்செயலில்— கொண்டுவருவதற்கும், அதற்குள மக்கட்பெருக்கம் மறு திட்டங்களை எதிர்பார்க்கும்அளவில்பெருகிவிடும் போல் இருக்கின்றது, ஆதலின் இந்நிலைகளையெல்லாம் அறிந்துஉடனடியாக ஆவன செய்யாவிடின் மிகக் கேடானநிலை உண்டாதல் திண்ணம்

தமிழ் நாட்டில் மனிதன் கத்தாழையையும்,கள்ளியையும், புண்ணாக்கையும், புளியங்கொட்டையையும் தின்று காலத்தைப்போக்கும்நேரத்தில் கனம் மந்திரிமார்கள் தத்தம் பரிவாரங்களுடன் சென்று துளசிச் செடியையும், பயனற்ற பாழ் மரங்களையும் நட்டுப்பொருளைப்பொருளாக்கருதாமல் காலத்தை கழித்தலை நோக்கின் மிகுதியும் வருந்தவேண்டியதாக இருக்கிறது இதுவாஉணவு உற்பத்தியைப்பெருக்கும் வழிகள். மரம் நடும் விழாவிற்கு இத்தனை ஆர்பாட்டங்களும், ஆரவாரங்களும் தேவை இல்லை. உழைப்பாளிக்கு உணவு தந்து உதவின் அவனே அப்பணியைமேற்கொள்வான்வாசகர்களே நீங்களேமுடிவுசெய்யுங்கள்

சர்க்கார் ஊழல்கள் என்பது எண்ணிலும் ஏட்டிலும் அடங்காத விஷயமாய் விட்டது. ஒரு மாகாணத்தில் 16 அவுன்சும், மற்றெரு மாகாணத்தில் 6 அவுன்ஸ் என்று கூறி அதுவுமில்லாமல்செய்துமாக்களாக்கிக் கத்தாழையை உண்ணச் செய்தல், ரேஷனில்தென்னாட்டானுக்கும் வடநாட்டானுக்கும் வேறுபாடு,— உணவுப்பொருள்களை ரேஷன் ஷாப்புகட்குச்சரிவர வினியோகம்— செய்யாமை. குடோன்களில் உணவுப்பொருள்களைக்கவனிக்காத காரணத்தால் கடலில் தள்ள வேண்டிய நிலை உண்டாய் இருத்தல், நகர மக்கட்கு அரிசி, கிராம மக்கட்கு செஞ்சோளம், கோதுமை அதுவுமில்லாமல் பட்டினிபோட்டுச் சாகடித்தல். அஸ்ஸாமில் பூகம்பம் ஏற்பட்டது, விமானத்தில் சப்ளை சென்னையில் குழந்தைகள் தாயின் பசிக்காக விற்கும் நேரத்தில் ரயில்வேமந்திரியிடம் உணவுப்பொருள் ஏற்றிச்செல்லும் வேகன்கட்கு மனுபோட்டுக்காலத்தைக்கழித்தல். இன்னும் எத்தனையோ கூறலாம்.

அரசாங்கத்தில் ஊழல் மலிந்து விட்டது என்று நான் மந்திரியினிடம் கூறுவதல்ல நாடே கூறுகிறது பொறுப்புள்ள தலைவர்கள் ஜயப்பிரகாஸ் முதல் யாவரும் கூறுகின்றனர்.

மத்திய சர்க்காரில் உணவுமந்திரி பதவியை ஏற்றுள்ள ஸ்ரீ முன்ஷி அவர்களைத் தற்பொழுது யாவரும் அறிவர் அவர் புழுகுகளை உற்று நோக்கின் முன்னாள் ஜெர்மனியில் புழுகுவதில் தனக்கு ஈடு இணை ஒருவரும் இல்லையென உலகறியச்செய்த கோயபெல்ஸ் அவரையும் இவர் வென்றுவிடுவார்போல் இருக்கிறது. பொதுமக்களே. நினைவிருக்கும் என்று—எண்ணுகிறேன் சென்ற வாரத்தில் செய்தித்தாள்களில் நாம் கண்டவற்றை பார்லிமெண்டில் சென்னை மாகாணப்பிரதிநிதிகளும், பாமராளும் அமைச்சர்களும், அதிபர்களும் வீற்றிருக்க அவர்தம் முன்னிலையில் பட்டினியால் இறக்கவில்லை, குழந்தைகளை விற்கவில்லை, கத்தாழையை மக்கள் தின்னவில்லை, உணவுப் பொருள்களைப்பற்றிக் கவலைப்பட—வேண்டியதில்லை என்று கூசாமல் பொய் கூறினர் என்றால் இதைவிட கேவலமான நிலைமை வேறொன்றும் இல்லை என்றே கூறலாமல்லவா. மேலும் நாட்டில் நன்னிலை ஏற்பட இன்னும் ஒரு சில ஆண்டுகள் தேவை அதற்குள் அடுத்த ஆண்டு 1951-ல் வெளி நாட்டிலிருந்து உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என்று கூறுதல் அடுத்து வரும் எலக்‌ஷனுக்குப்போடும் அஸ்திவாரமா அல்லது அழிவுவேலையா?

தற்பொழுது நம்மாகாணத்தில்—ஏற்பட்டிருக்கும் நிலையை அறிந்து ஏழைகளையும், உழைப்பாளிகளையும் ஊக்குவிக்க உணவுப்பொருள் உடனடியான தேவை என்பதை அரசாங்கம் அறிந்து ஆவன செய்யாமல் மேலிடத்தை எதிர்பார்த்திருப்பரேல் அதற்குள் பலர் மேலிடம் சென்று விடுவர் என்பது திண்ணம் ஆதலின் ஆவன உடனே செய்க. வாழ்க தமிழகம்.

குறள்:—

குடி செய்வார்க்கில்லை பருவம்
மடிசெய்து மானம் கருதக்கெடும்.

பொருள்:—

மக்களுக்கு-மனிதத்தன்மைக்கு தொண்டு செய்கிறவன். காலம்-பருவம் பார்க்கக்கூடாது-மானம் வெட்கம் பார்க்கக்கூடாது.

—பெரியார்.

அறிவிப்பு!

சென்ற திங்கள் மதுரை மாவட்டத்தில் பத்திரிகைக்கு—ஆக்கம் தேடும்வகையில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது எதிர்பாராத விதமாக நமது ஆசிரியர் S. A. மாணிக்கம்—அவர்கள் இருதயநோய் ஏற்பட்ட காரணத்தால் சென்ற இருமாதத்தில் சஞ்சிகை வெளியிட முடியாமற்போயிற்று நெஞ்சு வலியால் மதுரையில் சில நாள் தங்கி சிகிச்சை பெற்று சொஸ்தம் அடைந்தும் ஊர் வந்துசேர்ந்தார். பத்திரிகையை பரபரப்புடன் பொங்கல் மலராக வெளியிட்டுள்ளோம். 1951 ஜனவரி மாதத்திலிருந்து பத்திரிகை எவ்வித தடையின்றி வழக்கம்போல்—தொடர்ந்து வெளிவரும்.

—ஆசிரியை

எது அறிவு?

திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாதம்.

"அறிவு" என்பது எது? எது அறிவு? என்னென்னவோ, எவரெவராலோ ஆராயப்பெற்று வருகிற இக்காலத்தில் நாம் இதை யாவது, இப்போதாவது ஆராய வேண்டாமா? ஆராய்வோம். இன்றேல், 'நாம் அறிவைப் பெற்றிருக்கிறோம்' என்றுஎவ்வாறு கூறுவது?

அறிவு, கண்களால் காணக் கூடிய ஒரு பொருளல்ல; என்றாலும் மக்களின் செயல்களைக் கொண்டே அதைஆராய்ந்து அறிய வேண்டியிருக்கிறது. அறிவையுடையவர்கள் நல்லவர்கள் என்றும் அறிவற்றவர்கள்பொல்லாதவர்கள் என்றும் சொல்லப்பெற்று வருகிறது.

இது உண்மையாகுமானால், எதை அறிவு என்று கூறுவது? என்பது விளங்கவில்லை. இதனை ஆராயும் பொழுது நமக்குப் பல ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

அறிவைக் காண வேண்டுமானால் உண்டு, உறங்கி, ஓய்ந்து கிடக்கும் நல்ல பிள்ளைகளிடம் சென்று பயனில்லை. ஓயாது சேட்டை செய்து, விரைவாகத் துன்பத்தை விளைவிக்கும் பொல்லாத பிள்ளைகளிடத்துத் தான் அறிவைக்காண முடிகிறது.

பணத்தை முடிந்து தோளில் போட்டுக்கொண்டு நடந்துசெல்லும் நல்ல மனிதர்களை விட, அதனை அவிழ்த்துஎடுக்கின்ற முடிச்சவிக்கிகள் அறிவை அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள்.

உயர்ந்த பொருளை வைத்து, உள்ளவிலை கூறி விற்கின்ற நல்ல வியாபாரிகளை விட மட்டப்—பொருளை வைத்து அதிக விலைக்கு விற்றுப் பொய் கூறிப் பொருள் தேடும் பொல்லாத வியாபாரிகள் அதிக அறிவுடையவர்களாகக்காணப்படுகிறார்கள்.

நேர்மையாகத் தொழில் செய்கின்ற உத்தியோகஸ்தர்களை விட

இலஞ்சம் வாங்கி தொழில் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக— அறிவு வேண்டியிருக்கிறது.

உடலைவருந்தி உழைத்துழைத்து உண்ணுகின்ற கிராம மக்களை விட உழைக்காது உண்ணுகின்ற நகர மக்கள் அதிக அறிவுடையவர்களாகத் தோன்றுகிறார்கள்.

பொதுநலங் கருதித் தொண்டு செய்து வருகின்ற உண்மையான உழைப்பாளிகளைவிட தந்நலங் கருதி பொதுத்தொண்டு செய்வதாக நடிக்கின்ற தீய மக்களிடத்து அதிக அறிவு காணப்படுகிறது.

நெறி தவறாது வாழ்க்கை நடத்தி வரும் பெண்களைவிட நெறி தவறி வாழ்கை நடத்தும் பெண்கள் அதிக அறிவுடையவர்களாகக்காணப் படுகிறார்கள்.

முடிவாகக் கூறுமிடத்து "யோக்கியர்களைவிட அயோக்கியர்களே அதிக அறிவுடையவர்களாக இருக்கிறார்கள்" எனக்கூறலாம் "நல்ல மனிதன்" என்றால் பாவம்! ஒன்றும் தெரியாதவர் என்றும், "பொல்லாத மனிதன்" என்றால் எவராலும் ஏமாற்ற முடியாதவர் என்றும் பொதுவாக நம்மிடையே வழங்கி வருகிற ஒரு வழக்கம் இதனை மெய்ப்பிக்கிறது!

அவ்விதமாயின் எது அறிவு? எவரிடத்துக்காண்பது அறிவு? பொல்லாத மக்களிடத்திலிருந்து தான் அறிவு ஒளி வீசுமா? நல்ல மக்களிடத்திலிருந்து அது ஒளி வீசாதா? என்ற கேள்வி நம்மிடையே விரைவாக எழும்.

இக்கேள்வியைப் பலரிடத்தும் கேளுங்கள். வருகின்ற விடைகள் உங்கள் அறிவுப்பசிக்கு ஏற்ற உணவாக இருக்கிறதா? என்றும் சுவைத்துப்பாருங்கள். பிறகு இதே கேள்வியை திருவள்ளுவரிடம் போய்க்— கேளுங்கள். ஏனெனில் அவர்தான் "எது அறிவு?" என்பதைக்காட்டக் கூடியவர் அவர் ஒருவர்தான் அறிவு எது? என்பதைக்காட்டியிருக்கிறார் அது எது?

மண்ணை, பெண்ணை, பொன்னை, பொருளைக்கண்டால் மனம் அவற்றையடைய அவைகளின் மீது தாவுமாம்! மனத்தை அவ்வாறு செல்ல விடாமல் தடுத்து, தீய எண்ணங்கள் தீய செயல்களிடத்திலிருந்து விலக்கிக் காப்பாற்றி நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களினிடத்து அதைச் செலுத்துவது எதுவோ? அதுவே அறிவு! என்று வள்ளுவர் கூறுகிறார் இக்கருத்துக்களடங்கிய வள்ளுவரது சொற்களை அவருடைய வாக்கினாலேயே கேளுங்கள்.

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்ப தறிவு"

என்பதே அவரது வாக்கு.

"மனம் சென்ற விடமெல்லாம் அதனை செல்லவிடாது தடுத்து தீமைகளிலிருந்து விலக்கி நல்லவைகளிடத்து செலுத்துவதே அறிவு" என்பது இதன் பொருள்.

"மனமே அறிவு!" என மயங்கியிருப்பதினாலும், மனதின் செயல்களனைத்தும் அறிவின் செயல்களென கருதியிருப்பதினாலுமே மேலே கண்ட ஐயப்பபாடுகள் நமக்குத் தோன்றின.

மனம் வேறு; அறிவு வேறு என்றும், மனதிற்கும் அப்பாற்பட்ட ஒன்றே அறிவு என்றும், மனதை அடக்கி ஆள்வதே அறிவு என்றும்

வள்ளுவர் வகுத்துக்காட்டுவதிலிருந்து நமது ஐயம்பாடுகள் அனைத்தும் அழிந்து ஒழிகின்றன.

"மனம்செல்லும்வழிகளை 'தவறு' என எடுத்துக்காட்டித்திருத்தி நல்ல வழிச்செல்ல அறிவு; அறிவுத்திறனும் அதனையும் மீறிச்செயலாற்றும் வலிமை மனதிற்கு உண்டு" என்பதை வள்ளுவர் "நன்றின்பாலுய்ப்பது அறிவு" என்ற சொற்களால் கூருமற்கூறுகிறார்.

திருடனுடைய மனம் திருட எண்ணுகிறது. திருடத்துணிகிறான்.—பிறகு திருடுகிறான். திருடும்போது அஞ்சி நடுங்குகிறான். ஏன்? அது தவறு என்று அவனுடைய மனதுக்கு அறிவு அறிவுறுத்துகிறது.—அறிவு உணர்த்தியும், தான் உணர்ந்தும், அறிவின் வழிச்செல்லாமல் ஆசையால் தூண்டப்பட்டமனதின் வழிச்சென்று திருடிவிடுகிறான். அறிவையும் மீறி மனம் செயலாற்றும் முறையை விளக்க இது ஒன்றே போதுமானதாகும்.

திருடுவது, பொய் சொல்லுவது, ஏமாற்றுவது, நெறிதவறுவது, ஆகிய எதுவும், எவ்வளவு திறமையாகச்செய்யப்பட்டாலும் அது அறிவின் செயல் அல்ல; மனதின் செயலே என்றும், அதன் தவறுகளை உணர்த்தி நல்ல வழியிற்செல்லத் தூண்டும் செயலே அறிவின் செயல் என்றும் திருவள்ளுவரின் திருக்குறள் நமக்கு தெளிவாகக்காட்டுகிறது.

கண்டவிடமெல்லாய் கருத்தைச் செலுத்தி ஓடி அலையும் மக்களுக்கு உண்மையை உணர்த்தி, நல்வழி நடத்தும் பெற்றோர்கள் அறிவின் உரு ஆவார்கள். துள்ளித்திரியும் இளங்காளைகளை அடக்கி உழவுக்குப் பயன்படுத்தி வரும் உழவன் அறிவுருவாளன். திமிர்பிடித்த குதிரைகளை அடக்கி வண்டியிற்பூட்டிஒழுங்காக செல்லும்படி நடத்துகின்ற வண்டிக்காரனும் அறிவின் உரு. மதங்கொண்ட யானையை அடக்கி, தீமை செய்வதினின்றும் விலக்கி, நேரான வழியில் நடத்துகின்ற—யானைப்பாகனும் அறிவுக்கு எடுத்துகாட்டாக இருப்பவன் என்று இக்குறளால் அறிய முடிகிறது.

இதிலிருந்து அறிவின் வழிச் செல்லும் மக்கள் அறிவைப்பெற்றவர்கள் என்றும், மனதின் வழிச் செல்லும் மக்கள் அறிவை இழந்தவர்கள் என்றும் நன்கறிகிறோம்.

ஆகவே, தம்பிகளே! தங்கைகளே உங்களுடைய ஐயப்பாடுகள் என்னாயிற்று? வள்ளுவர் கூறுகிறவிடை எப்படி இருக்கிறது? எது அறிவு? என்பது இப்போது விளங்குகிறதா? வள்ளுவர் காட்டும் அறிவு உங்கள் அறிவுக்குப்பொருத்தமாக இருக்கிறதா?

எடுங்கள் திருக்குறளை! படியுங்கள் நன்றாக! மனம் செல்லும் வழியெல்லாம் செல்லாமல், அறிவு செலுத்தும் வழியில் செல்லுங்கள் செய்வன செய்து சிறப்பெய்தி வாழுங்கள். பொங்கற் பெருநாளும் தமிழர் திருநாளுமாகிய இன்று உங்கள் அறிவு பொங்கட்டும்! தமிழ் மொழி பொங்கட்டும்! தமிழ் அறம் பொங்கட்டும்! வள்ளுவர் நெறி என்றென்றும் பொங்கிப் பெருகட்டும்! எனக்கூறுவதோடு இக்கட்டுரையை முடிக்கிறேன்.

விருப்பு வெறுப்பு அற்றவர்களுக்கு எப்போதும் துன்பம் என்பதே இல்லை.

—குறள்

கொட்டு முரசே!

(கவியரசர் பாரதிதாசன்)

உயர்வென்று கொட்டுக முரசே—நல்ல
உண்மைத்தமிழர்கள் வாழ்வு!
அயர்வில்லை அச்சமிங்கில்லை—புவி
ஆளப்பிறந்தவன் தமிழன்
உயர்வென்று கொட்டுக! முரசே

அயல் என்று கொட்டுக முரசே—உற
வான திராவிடர் அல்லார்!
துயர் செய்ய எண்ணிடும் பகைவர்—திறம்
தூள் என்று கொட்டுக முரசே
உயர்வென்று கொட்டுக முரசே!

அறிவுள்ள திராவிடர் நாட்டில்—சற்றும்
ஆண்மையில்லாதவர் வந்து
நமர் பசிக்கொள்ள நம் சோற்றை—உண்ண
நாக்கைக் குழப்ப துணர்ந்தோம்,
உயர்வென்று கொட்டுக! முரசே

தமிழ் நாடு தமிழருக்கென்றே—இந்தச்
சகத்தில் முழங்கிடு முரசே;
நமைவென்ற நாட்டினர் இல்லை—இதை
நாற்றிசை முற்றும் முழக்கு!
உயர்வென்று கொட்டுக! முரசே!

"வாழ்க முரசு"

"கோவை முரசு" தமிழ் மாதப் பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு,

அன்புமிக்க ஐயா, நலம். நலமே விரும்பும் நாடெங்கும் நலம் விளைக்கும் உருவெடுத்து உலவுகின்ற—இத்தகைய நன்னாளில், எங்கும் இருளகன்று ஒளி பெருகி பகல் விடியும் பருவத்தில் நம்மனோர் பழங்குடியை இழிந்த மடிநீக்கி முன்னேற்ற முயலுவது அறமறவாச் சான்றோர்கள் பாராட்டிற்குரியது ஆகும். பழிபாவமஞ்சாத—வஞ்சகர்தம் சூழ்ச்சியாலே, கடவுட் பெயரால் நடுவின் நாட்டியதோர் திட்டம் என நம்பிக்கெட்ட குடியை நாளடைவில், குற்றமறைத்துக் குடி செய்வார்க்கு எஞ்ஞான்றும் வெற்றி விளைவதில் ஐயமில்லை. 'குடி செய்வல் என்னும் ஒருவர்குத் தெய்வம்—-மடிதெற்றுத்தான் முந்துறும்' என்பது அறங்கூறும் பொதுமறையின் பொருளுரை அன்றோ? அதை முழக்கிப் பரசவரும் 'முரசுக்கு'பல்லாண்டு கூறுகிறேன்.

தமிழர்க்கு "கடனென்ப நல்லவை எல்லாம்" அல்ல தனைவிதிப்பது மெய்ச் சமயமாகா. எந்நாளும் பாவமொடு பழி வழக்கு படுத்தொழிக்கும் அறம் நிறுவ ஆவன செய்வதைவிட நற்கடன் வேறில்லை.

அறனறிந்து மூத்த அறிவுடையார் தேர்ந்த நெறிமுழக்கும் "கோவை முரசுக்கு" கொற்றம் பெருகிடுக. வழுக்குவதி யார்க்கும் பழியில்லை; இழுக்கறிந்தும் ஒழிக்காமல் இருப்பதுவே இழிவாகும். மதமாமென்றிதஞ் சொல்லி மயக்குபவர் சழக்குரையை மதித்தல் வழு.

பேரறிஞர், நாவலர்.

S. சோமசுந்தரபாரதியார் M.A.B.L.

கடவுளொடு பழிகளுக்கு தொடர்பு சொல்லி, சமயத்தை இழித்து மக்கள் சால் பழித்து பொய், சூது புகழ்நெறிகள் பழைய தமிழ் அறமன்று; மரபுமாகா. அகநகரில் அரசர் பெருமாளிகையின் அருகமையும் ஆலயத்தில் இழிவுடைய தொழிலெதற்கும் தமிழ் வழக்கில் இடமே இல்லை. அறமழிக்கும் முறைகளெல்லாம் புறஞ்சேரிகளிலிருந்து நகர் புகாமல் விலககிவைத்தார் பழந்தமிழர். ஒழுக்கியவர்கிரங்கி அவர் பிழைக்க வழி வகுத்து வைத்தார் தீதகற்றியக் காதலறும் கடைபிடிக்கும் மாதர் முன்னே ஏதோ நெறி நடந்தலும பின்னுரியவதுவையொடு காதலரை மணந்தவர்க்கு கிழத்தியராய் வாழுநிலை வழங்கி வந்தவர். கோயில் தொண்டென்று கூறி பேதயரைச்சாதலின் இன்றைத பழி பாவ இழிதகவாம் வாழ்க்கையினில்

புகுத்து அவர் சாகும்வரை நினைந்தி ரங்கி நினைந்தழுதுவருந்தவைக்கும் புதியமதம் இடை நெடிய இருட்கா லத்திங்கே அறிவை மறைத்தரசா ளத்தொடங்கியது அறனறிவார் அக் கொடியார் பேய்மதத்தை யாய்ப்ப தினும் அறக்கடமைபிறிதில்லை.— "அறம் வெல்லும் அல்லவைதேயும்" என்பதில் உண்மை உண்டேல் இன்நெடும் பாவப்பழிவழக்கின்— கொடுமைக்கு பயம் வேண்டா. தள ராத உள்ளத்தோடு இவ்வறத்துறை யில் முயல்வோரெல்லாம் முற்றும் வெற்றி விறைவினிலே அடைவதும் உறுதியன்றோ? முரசோங்க முயல் வோர் தம் ஆட்சி நிலைமாட்சியுமாக அறம் வாழ்க; அல்லாததீயவெலாம் ஆழ்க.

★

நமக்கு கட்சி இல்லை
ஆனால் கொள்கை உண்டு—திரு. வி. க.

குறைந்த விலை! நிறைந்த ரகங்கள்!!

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஏராளமான
புதுரக ஜவுளி தினுசுகள் வந்திருக்கின்றன
எங்கே?

பாம்பே வேர் ஹவுஸ்,
கோவை.

Shops & Shops Every Where
But Shoping for Pongal
BOMBAY WARE HOUSE
is a Pleasure & Profit

தேவைக்கு விஜயம் செய்யுங்கள்

BOMBAY WARE HOUSE,
BIG BAZAAR STREET, COIMBATORE.

கைத்தொழில் முன்னேற்றத்தில் தேர்ந்த தொழிலாளர்களின் பாகம்

அறிஞர். G. D. நாயுடு.

(விஞ்ஞான விற்பன்னர்)

நம் தேசத்தின் தொழில்களை முன் காலத்தோடு ஒப்பிடும்போது யுத்த காலத்துக்குப்பின்பு அதிக வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் மற்ற தேசங்களின் முற்போக்கைப் பார்க்கும்போது நம் முன்னேற்றத்தைப்பற்றி மகிழ்ச்சியடைய முடியாது. நம் தொழில் முன்னேற்றத்திற்கு யுத்தத்திற்கு முன்பு பல தடைகள் இருந்தது தொழில் வளர்ச்சியைத் தடுத்து வந்திருந்தாலும் கூட யுத்த காலத்திற்குப் பின்பும் வெகு தூரம் முன்னேறி இருக்கிறது என்று சொல்லலாம்.

ஆனால் யுத்தத்திற்கு முன்பு எதிர் கால முன்னேற்றத்திற்காக ஆங்காங்குள்ள நிபுணர்கள் கூடியோசித்து முடிவு செய்யப்பட்ட பிளான்களின்படி பல காரணங்களால் இப்பொழுது அவற்றை பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. இதற்குக் காரணங்கள் பல இருந்தாலும் அவற்றுள் முக்கியமானவை போதுமான மூலதனம் இல்லை என்பதோடன்றி தகுதியான கை தேர்ந்த ஆட்களும் இல்லை என்பதும் ஒரு முக்கியமான குறை. இது தவிர இருக்கின்ற ஆட்களும் Factory Act, Labour Act, Comunism Socialism, இதர யூனியன்கள் சம்பள உயர்வு, போனஸ், லீவு என்கிற சாக்காடுகளை வைத்துக் கொண்டு வேலைகளை ஒற்றுமையாக செய்யாமலும், செய்யக்கூடிய அளவு கூடச் செய்யாமலும், தொழில் முன்னேற்றம் ஒரு அளவுக்குத் தடை பட்டு வருகிறது. இந்த மனப்பான்மைக்கு எல்லாவற்றிலும் விலைவாசிகள் உயர்வு என்றது ஒரு காரணம். ஆனால் இந்த விலைவாசிகள் உயர்விற்குக் காரணம் உற்பத்தி குறைவு என்பதா? அல்லது உற்பத்திக் குறைவினால் விலைவாசிகள் உயர்ந்தது என்பதா? இதில் எது எதற்குக் காரணம் என்று சொல்ல முடியாவிட்டாலும் வேண்டிய பொருள்கள் இருக்கின்றன. வேண்டிய மூலதனம் இருக்கின்றது. வேண்டிய மூலப்பொருள்களும் அவற்றை உபயோகிக்க புத்தி கூர்மையும் இருக்கின்றது. ஆனால் ஒற்றுமை என்பது தொழிலாளர்கள்

தங்களுக்குள்ளாகவோ, அல்லது அவர்களுக்கும் மூலதனம் கொடுப்பவர்களுக்கும் மத்தியிலோ அல்லது இவர்கள் எல்லோருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் மத்தியிலோ சிதறுண்டு போயிருப்பது மிகத்தெரிந்த விஷயம் தொழிலாளிகள் தொழிலை சரிவரச் செய்யவில்லை என்பதும், முதலாளிகளும் வியாபாரிகளும், லாபத்தையும், சொத்தையும், வரிகளைக்கூடக் கொடுக்காது மறைத்து வைத்திருப்பது உண்மையாய் இருப்பதன்றி நம்முடைய சர்க்காரின் செயல்களும் பல விதங்களில் இந்த முறைகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ காரமாணயிருக்கிறது.

ஒரு வேளை நம் சர்க்காரின் போக்கு இத்தத் தொழில்களுக்கு எதிரிகளோ என்றும் கூட நினைக்கும்படியாக இருந்துவருகிறது.— இதற்குக் காரணம் நமது சர்க்கார் ஒன்றேயல்ல. சர்க்காரைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் நாம் எல்லோரும் இதற்குக் காரணமாயிருக்கிறோம்.

இந்தக் குறைகளில் மூலதனத்தைப்பற்றிய மனப்பான்மையோ அல்லது சர்க்காரின் மனப்பான்மையோ, தங்கள் குற்றங்களை அறிந்துகொண்ட மறுகணமே இக் குறைகளை நீக்கிவிடமுடியும். ஆனால் தொழில் செய்யும் தொழிலாளிகளின் பிற்போக்குத் தன்மையை இதையடுத்த மறுக்கணமே நீக்க முடியாது. அதோடு தொழில் திறமையும், தேற்சியும் மற்றவைகளைப் போன்று ஒரு மணி நேரத்திலோ, அல்லது ஒரு நாளிலோ மாற்றிக் கொள்ளக்கூடியதன்று. தொழில்கள் தகுந்த துறையிலே இருக்கும் பட்சத்தில் எப்பொழுதும் எந்த இடத்திலும் மூலதனம் உடையவர்களும் அரசாங்கமும் தொழிலாளியினுடையதாகவே இருக்கலாம்.— அதே சமயத்தில் மூலதனக்காரரும் தகுந்த முறையோடுள்ள தொழிலாளர்களும் அரசாங்கத்தினுடைய— விலைமதிப்பற்ற சொத்துக்களாக— இருக்கலாம், பொதுவாக உலகத்திலுள்ள எந்த அரசாங்கத்திற்கும்— அந்த தேசத்திலிருக்கும் எந்தவகையான தொழிலாளர்களும், அவர்களுடைய நிலைமையையும் திறம்பட செய்கின்ற தொழிலும்தான் உயர்ந்த சொத்துக்களாக இருக்குமேயன்றி வேறு எந்த வேலைக்கும் உதவாத முறையில் அச்சடித்திருக்கும் காகிதப்பணமோ அல்லது வேறு வேலைக்காக உலோகத்தால் செய்யப்பட்ட காசு, பணம், ரூபாயோ ஒரு சொத்து ஆகமுடியாது. ஆனால் இந்தக்காகிதத்தின் மதிப்பும், உலோகத்தின் மதிப்பும் அந்தந்த தேசத்திலிருக்கும் தொழில் உற்பத்தியின் பெருக்கத்தையும், முன்னேற்றத்தையும் பொறுத்து உயர்ந்து விடுகிறது. உதாரணமாக அமெரிக்கா சுவிட்ஜர்லான்ட் முதலிய தேசங்களினுடைய டாலர் பணத்தின் மதிப்பை பாருங்கள். இன்று இந்த தேசங்களின் நாணயங்கள்தான் உலகத்திலேயே உயர்ந்தமதிப்போடு இருக்கின்றன இதற்குக்காரணம், அந்த தேசங்களினுடைய திறமையும்,— தேர்ச்சியும் வாய்ந்த விவசாயத் தொழிலாளர்களும், விடா முயற்சியுடன் கூடிய இயந்திரத்தொழிலாளர்களும் நுண்ணிய அறிவின் தேர்ச்சியுடையமற்ற விஞ்ஞானத்தொழிலாளர்களும் ஒன்றுபட்டு அவர்களுடைய குறைந்த காலத்தில் உயர்ந்த சாமான்களை அதிக அளவில் செய்யும் திறமைதான் இந்த மதிப்புக்குக் காரணம் இதுவரை பல அசந்தர்ப்பங்களாலும், வேறு சில காரணங்களாலும் நம் நாடு அபிவிருத்தி அடையாதிருந்தாலுங்கூட நமக்கு அப்பொழுது வாய்ந்திருக்கும் வாய்ப்பைக்கொண்டு மேற்சொன்ன— தேசங்களை விட வெகு தூரம் முன்னேறக்கூடும் என்று உறுதியாய்— சொல்லக்கூடும். இந்த முன்னேற்

றத்தை அடையச்செய்வது அரசாங்கத்தினால் மாத்திரம் முடியாது. அல்லது மூலதனம் வைத்திருக்கும் பணக்காரர்களாலும் முடியாது. இவை இரண்டும் இல்லாதிருக்கும் பட்சத்தில் தொழிலாளர்களினால்மாத்திரம் முடியாது. தொழிலாளர்கள் முன் சொன்னமாதிரி ஒவ்வொரு குறைகளைச் சொல்லிக்கொண்டும், ஒற்றுமையைக் குறைத்துக் கொண்டுமிருக்கும் பட்சத்தில் தங்களுக்கே கெடுதி பயப்பதன்றி, தேசத்திற்கே கெடுதலைக் கொண்டுவருமென்பதில் ஐயமில்லை. இதற்குச் சர்க்காரும் மிக அதிக அளவில் தொழில் நுட்பங்களைக்கற்றுக்கொடுக்கவும் கைதேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்க தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும்—முன் வரவேண்டியது மிக அவசியம் தொழில் நுட்பங்களைக்கற்றுக்—கொடுக்க இப்பொழுது இருக்குப்—நிலையங்களில் அதிக காலத்தை வீணாக்கப்பட்டு வருகிறது. சர்க்கார் நிலையங்களாயினும் சரி, அல்லது இயந்திரத் தொழிற்சாலைகளாயினும் சரி, அல்லது விவசாயத்தொழில்களாயினும் சரி தொழில் நுணுக்கங்களை மிக்க குறுகிய காலத்தில் அதிகம் பேருக்குக்கற்றுக்கொடுக்க உயர்ந்ததும் சிறந்ததுமான முறைகளைக்கையாள வேண்டும்.

முன்பு சாதாரண காலங்களில்—எவ்வளவு நாட்கள் ஒருவர் ஒரு வகைத்தொழிலையோ, கல்வியையோ கற்க செலவிடப்பட்டதோ—அந்த நாளில் பத்தில் ஒரு பாகம் அல்லது எட்டில் ஒரு பாகத்தில் அதே அளவுள்ள ஒரு தொழிலை இன்னும் உயர்ந்த முறையில் யுத்த காலத்தில் கற்பிக்கப்பட்டு வந்ததை நேரில் பார்த்திருக்கிறோம். அதே முறையைத்தான் சில இடங்களில் அனுசரிக்கப்பட்டு அநேகம்பேருக்கு தொழில் நுட்பங்களை இதுவரை மத்திய சர்க்காரால் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. இதை துரதிருஷ்டவசமாகவோ அல்லது நல்ல அதிர்ஷ்டவசமாகவோ, செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த போதனை முறையை நிறுத்தி இவற்றை முதலில் இருந்த தொழில் அகங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த இணைக்கப்பட்டுள்ள இன்டஸ்டிரியல் ஸ்கூல்கள். பாலிடெக்னிக் என்ற தொழில் பள்ளிக்கூடங்கள், இஞ்சனீரிங் காலேஜுகள் ஆகிய இவைகளும் தங்களுடைய பழைய முறைகளை விட்டு இந்தப் புதிய முறைகளைக்கையாண்டு மிகக் குறுகிய காலத்தில் குறுகிய செலவில், அதிக அறிவை அதிக பேருக்குப் புகட்டக்கூடுப்படியாக யுத்தகாலத்திலிருந்ததைப்போல் மாற்றி அமைக்கும்பட்சத்தில் அது நமது தேசத்தின் நல்ல அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். அவ்விதமான சமூகங்கள் அவ்வளவு அதி+ம் அமைக்கப்பட்டு இருக்கின்றனவா? எவ்வளவு பேர் எவ்வளவு சீக்கிரம் தேர்ச்சியடைகிறார்களோ இவ்விதம் தேர்ச்சியடைந்தவர்கள் எவ்வளவு உற்பத்திசெய்கிறார்களோ, அதைப் பொறுத்துதான் நம் ஒவ்வொருவருடைய செல்வ நிலைமையையும் சர்க்காரின் செல்வ நிலைமையையும் மதிப்பிட வேண்டியிருக்கும். மொத்தத்தில் வருங்காலத்தின் ஒரு தொழிலாளியின் அனுபவமும், உண்மையும், ஒழுங்கான பழக்க வழக்கங்களும், திறமையோடும், ஒழுக்கமாகவும்—உற்பத்திசெய்யக்கூடியதை வைத்துதான் நம்மையும், நம்தேசத்தையும் உலகத்திலுள்ள தேசங்களுக்கு சமமாகவோ மேலாகவோ மதிக்கமுடியும் என்பதை ஒவ்வொருவருடைய மனதிலும் ஞாபகமூட்ட விரும்புகிறேன். சிறிது காலமாக ஒவ்வொரு தொழிலாளியும் தானே சுதந்திரங்களோடும் பிறந்து வந்திருப்பதாக நினைத்துக்கொண்டும், ஜாதி துவேஷங்களினாலோ, தன்னால் அறிந்து கொள்ள முடியாதிருக்கும் சோஷலிஸம், கம்யூனிஸம் என்கிற போர்வைகளினாலோ தூண்டப்பட்டும், பொதுவாக ஒரு பாகுபாட்டின் வழி

யைக்காட்ட மேல்நாடுகளிலேசெய்யப்பட்ட தொழில் சட்டம், தொழிற்சாலை சட்டங்களில் நமக்குப்பயன் படாத அல்லது நமக்குக்கெடுதி— விளைவிக்கக்கூடிய வாசகங்களையும் பாகங்களையும் எடுத்து வாதாடிக் கொண்டும் நாம் செல்லக்கூடிய— முன்னேற்றத்தைவிட்டு பின்னேற்றம் அடைந்துகொண்டிருக்கிறோம். ஒரு தொழிலாளி, ஏன் தனக்கு ஒரு காரியதரிசி இருக்கக்கூடாது? பிறகு ஏன் ஒரு காரும், ஒரு மாளிகையும் இருக்கக்கூடாது என்று நினைக்கிறான். ஒரு மாளிகை வைத்திருப்பவன் ஏன் நமக்கு ஒரு மந்திரி இருக்கக்கூடாது என்று நினைக்கிறான். இதன்றி அநேகம் பேர் இருக்கும் தொழிலை ஏன் சும்மா இருக்கக் கூடாது? ஏன் கஷ்டப்பட வேண்டும் என்று கூட நினைக்கிறார்கள் நம் ஜனங்கள். அச்சடிக்கப்பட்ட நோட்டுகள், காசுகள் அல்லது மிஷினில் செய்த ஒரேமாதிரி பாகங்கள் இவைகளைப்போன்று உண்டாக்கப் படவில்லை. ஆனால் ஒவ்வொரு தனித்தனி இனமாகவும் பிறக்க வில்லை. எல்லோரும் இரண்டு கால்களுடனும், இரண்டு கைகளுடனும், இரண்டு கண்களுடனும் பிறந்திருந்தாலும் கூட ஒவ்வொருவரும் சிறு அளவிலோ, பெரும் அளவிலோ, வித்தியாசப்பட்டுத்தான் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அந்த அளவிற்கு ஏற்பட்ட தொழில்களைத்தாங்களாகவோ மற்றவர்களாகவோ சரியான முறையிலும், அளவிலும் தெரிந்து எடுத்துக் கூடுமான வரை ஒவ்வொருவரும் ஒற்றுமையோடு— உழைத்தாலன்றி நம் தேசம் முன்னேற முடியாது இதை மனதில் வைத்து ஒவ்வொருவரும் எந்த இடத்தில் வித்தியாசம் இருந்தாலும் — அவைகளைத்தாமாகவே அல்லது சர்க்காரின் பொறுப்புவாய்ந்த அதிகாரத்தால் அவ்வித்தியாசங்களை ஒழித்து, ஒழுங்கு பட தொழிலாளர்கள் தொழிலை நடத்தி அதிசீக்கிரம் முன்னேறுவோமாக.

(வானொலி நிலையத்தார் இசைவு பெற்றது.)

—: சிந்தனை விருந்து :—

கேள்வி:— ஏம்பா கண்ணு! இன்றைக்குத்தபாலில் ஏதாவது பத்திரிகைகள் வந்ததா?

பதில்:— உள்ளூர் பத்திரிகை சில வந்ததுங்க.

கேள்வி: — அதுதானே கேட்டேன் உள்ளூர்பத்திரிகையிலே பார்க்க வேண்டிய பகுதி என்ன இருக்கும்? சரி...... அப்படியே பழைய ஸ்டாண்டிலே அடுக்கி வை.

பதில்;— ஏனுங்க

கேள்வி:— கல்கத்தா ஓரியண்டல் வீக்கிலியா இருக்கணும் இல்லாவிட்டால் பாம்பே பிளிட்ஸ்வாது, காரக்காவின் மார்ச்சாவது யிருக்கணும், அதிலே பார்க்கவேண்டிய பகுதியிருக்கும் லோக்கல் பத்திரிகையிலே என்னயிருக்கப்போகுது.

பெண்டிர் நிலை

புலவர். சி. குழந்தையம்மாள்.
(நிர்மலா கல்லூரி. கோவை.)

காலஞ் செல்லச் செல்ல ஒவ்வொரு துறையிலும் மாறுபாடுகள் காணப்படுகின்றன. பெண்டிர் நிலையிலும் அத்தகைய மாறுபாடு காணப்படுவதியல்பே. பண்டு பெண்டிர் இருந்த நிலையும், இன்று இருக்கின்ற நிலையையும் நோக்குமிடத்து இனி இருக்கவேண்டிய நிலைகள் மனக்கண் முன் தோன்றுகின்றன. சிலம்பு, புறநானூறு முதலிய நூல்கள் நமது நாட்டில் பண்டு பெண்டிர் வாழ்ந்த நிலையை சித்தரித்துக் காட்டுகின்றன.

சேரன் செங்குட்டுவன் மனைவி இளங்கோ வேண்மாள் என்பவர். அவர் அரசனுடன் அரசவையிலே ஒருங்கு வீற்றிருந்து அரசியல் நுணுக்கங்களை எடுத்தியம்பும் ஆற்றல் பெற்றிருந்தனர். அதைச் சிலம்பில் "இளங்கோ வேண்மாளுடனிருந்தருளி" என்ற அடிகள் காட்டும். கண்ணகிக்குச் கோட்டஞ் சமைக்க உசாவிய காலை வேண்மாள் "எந்நாட்டாள் கொல்! யார்மகள் கொல்லே"!! என்று கூறியிருந்தால் சேரன் வடவரை வென்றிருக்க முடியுமா? தன் புகழைத்தான் நிலை நாட்டியிருக்க முடியுமா? புலவர் பெருமக்கள் அவனை பாடுவார்களா? இளங்கோதான் வஞ்சிக்காண்டத்தைப் பாடியிருக்க முடியுமா? இமயத்திலே தன் இலச்சினை பொறித்திருக்க முடியாது. கண்ணகிக்குக் கோயில் எடுக்கவும், சேரன், வீரம், புகழ் அனைத்தையும் நிலைநாட்ட வேண்டுமானன்றே காரணமானர்.

பெண்ணரசியாம் மங்கம்மாள் மண்ணரசாண்ட செய்தியறியாதார் யாரோ! இன்றும் மங்கம்மாள் சத்திரமென்று நிலவிவரும் சத்திரத்தை நிலை நாட்டியவர் அப்பெண்ணரசியே.

சிலம்பிலே கற்புடைமங்கையர் மூவர் வரலாறு காட்டப்பட்டுள்ளது. கணவன் கோல் கோடியிறந்தான்

அதைச் செம்மை செய்வான் பொருட்டு நெடுஞ்செழியன் மட்டும் உயிர் துறக்கவில்லை. அறக்கற்புடைய மனைவியுடன் உயிர் நீத்தான். இதுவன்றோ தலையான கற்பு கோவலன் இறந்தான் மாதவி துறந்தாள். மணிமேகலையும் துறந்து சமயத் தொண்டாற்றினாள். பரத்தையர் குலப் பெண்ணு யினும் மாதவியின் இடையான கற்பை ஏற்காதார் யாரே! கணவன் கொலையுண்டதைக் கேள்விப்பட்டாள், மாட மதுரையையும் எரித்து உடனே கணவனுடன் துறக்கஞ் சென்றாள். அன்னவள் கடையான மறக்கற்பையும் போற்றாதார் யாரோ! இத்தகைய தலை, இடை, கடை யான கற்பரசிகள் வாழ்ந்தது இந்த தமிழ் நாடே.

இனித்தலைவர்கள் விண்தோய் மலையிடத்தும் வேட் டைக்குச் சென்ற காலை மனைவியர் வீட்டிலிருப்பர். திறந்த வாயிலில் பாடிவரும் பரிசிலர்க்கு வரையாது தங்கள் தகுதிக் கேற்பப் பெண்யானைகளை இழையணிந்து நல்குவர்.

அதைப் புறநானூற்றில்

"பண்டும் பண்டும் பாடுநருவப்பப்
பெண்டிருந்தம் பதமீயுக் கண்டீரக்கோன்"

என்று காட்டப்பட்டுள்ளது. இதனாலன்றோ ஒருங் கிருங் இளவிச்சிக்கோவைத் தழுவாது, இளங்கண்டீரக் கோவைத் தழுவினர் புலவர் பெருமான் இத்தகைய புகழ் புரிந்தில்லாளை உடையவர்களாகவே தமிழ் நாட்டுத் தலை வர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

இனி அதிகமானுடைய அவைக்களப் புலவரான ஔவையார் தொண்டை மானிடத்துத் தூது சென்றார். அதிகமான் படை வீரத்தையும், கொடை வீரத்தையும் பழிப்பது போலப் புகழ்ந்தார். அப்பாடலர்களைப் படிக் குந்தோறும், நண்பொருட் செறிவைக் கேட்கும் போதும் ஒவ்வொரு பெண் மகளும் பெருமையடையாதிருக்க முடி யாது.

இன்னும் பாரி மகளிர் பாடல் போற்றப்படவில்லையா? மூவேந்தர்களுடைய வஞ்சனையை எத்துணையழகாகப் பாடி யுள்ளனர். இத்தகைய புலவர் பெருமக்களை கொண்டிருந் ததும் நமது தமிழ் நாடே.

இனிப்பெண்களின்று இருக்கின்ற நிலையைச் சற்று நோக்குவோமானல் நமது மனங் கலங்கத்தான் செய்கிறது.

இன்று எத்தனை மக்கள் கையெழுத்திடமுடியாமல் பெரு விரலை அடையாளமிடுகின்றனர். பஸ் நிற்குமிடங்களை அறிய முடியாதவர்களென்று ஒவ்வொரு நிலையத்திலும் படம் வரைந்து அறிவிக்க வில்லையா? புகை வண்டியில் பெண்டிர் தனித்துச் செல்லுமிடம் படத்தினால் அலங்கரிக்க வில்லையா? இப்படியே நோக்குமிடத்து எத்தனை யிடங்களில் படங்கள் அவர்களுடைய அறியாமைக்கு அளவு காட்டுகிறது.

ஆனால் இன்றும் ஒருசிலர் நாட்டுக்குத் தொண்டு செய்கின்றார். ஔவையார் தூது சென்றது போலவே விஜய லட்சுமி பண்டிட் அவர்களும் அமெரிக்கா, ஐக்ய நாடு முதலிய இடங்களுக்குச் சென்று நமது நாட்டின் நலனுக்காக பாடுபட்டு வருகிறார்கள். கேப்டன் லட்சுமியவர்கள் பல்லாயிரக்கணக்கான வீரர்களுக்குத் தலைமை தாங்கி நாட்டிற்குத் தொண்டாற்றுகிறார்கள். இன்னும் பல மங்கையர் மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஆராய்ச்சித் துறைத் தலைவர்களாகவும், சமூகச் சீர்திருத்தப் பணியிலும் ஈடுபட்டுப் பணிசெய்து வருகின்றனர்.

இனி வருங்கால இந்தியாவில் இன்னும் பல துறைகளிலும் மங்கையர் நல்ல சீர்திருத்தமடைய வேண்டும். நமது நாட்டின் பொருளாதாரம் மிகக் குறைவாக இருப்பதால் அவ்வத்துறையிலே பணி செய்யும் மங்கையரை அரசாங்கம் ஆதரிக்க முடியவில்லை. வடநாட்டிலும், பிற நாட்டிலும், இக்குறை மிகுதியாக இல்லை. இந்த நிலையிலிருந்து முன்னேறிப் பிற சீர்திருத்த நாடுகளுடனும், செல்வச் செழிப்புற்ற நாடுகளுடனும் சம இடம் பெற வேண்டுமானால் கல்வியறிவு மிக இன்றியமையாதது. அரசியலார் பெரிதும் உதவி செய்ய முற்பட வேண்டும். திறமுள்ளவர்கள் செல்வமற்றவர்களாகவும், செல்வமுள்ளவர்கள் திறமற்றவர்களாகவும் இருக்கும் நிலை மாறவேண்டும். பண்டு அரசிகளாகவும், கற்புடை நங்கையர்களாகவும், அமைச்சர்களாகவும், சீர்திருத்த மணிகளாகவும் வாழ்ந்தது போல இனிமேலும் வாழவேண்டும். அதற்குப் பெண் கல்வி இன்றியமையாதது. பெண் கல்விக்குப் பலவழிகளிலும் அரசாங்கம் ஆதரவு காட்டவேண்டும். அப்பொழுதுதான் உரிமையுண்டாம். உரிமை வந்தால் கடமையைச் செய்வர்.

வாழ்க தமிழ்!



டாக்டர்

திரு. C. S. இராமசாமி ஐயர் அவர்கள்,

கோயமுத்தூர்.

டாக்டர் இராமசாமி ஐயர் அவர்கள் பன்முறை அயல்நாடுகள் சென்று மருத்துவமுறையின் அபி விருத்திகளை நன்கு தெரிந்துகொண்டு வந்துள்ளார். இருதய சம்பந்தமான வியாதிகளுக்கு வைத்தியம் செய்வது என்பது இதுவரை கிடையாது. சமீபத் தில்தான் அமெரிக்கர் இம்முறையை கண்டுபிடித் தனர். நூதன முறையை தான் கற்றுக்கொள்வ துடன் அதற்கு வேண்டிய நூதன உபகரணங்களை யும் கொண்ட ஒரு சிகிச்சை செய்யும் சிறந்த நர்ஸிங் ஹோம் ஒன்றும் நிர்மாணித்து வருகிறார். இவரது முயற்சிகள் வெற்றிபெறுமாக.

வரவேற்பு வைபவங்கள் அடுத்த 'முரசில்' காண்க.

PHONE
226

GRAM
"BULLION"

உத்திர
வாதமுள்ள

K R

சீல் பவுன்
தங்க நகைகள்

சிறந்த
வேலைப்பாடு

குறைந்த
கூலி

கிடைக்குமிடம்:-

கே. ஆர். அண் சன்ஸ்,

பெரியகடை வீதி,

கோவை.

ஏ. சி. சி.

நீலகிரி பிராண்ட்

சிமெண்ட்.

சொந்த உபயோகத்திற்கு **20** மூட்டைகள் வரை

பர்மிட் இன்றி சிமெண்ட் கொடுக்கப்படும்.

மூட்டை 1-க்கு ரூ. 3--12--0

கோவைக்கு பூரண உரிமையாளர்:—

சுந்தரம் & கம்பெனி

(Sole Stockist of C. M. I. Ltd)

ஒப்பணக்கார வீதி — கோயமுத்தூர்

கார்ந்திபுரம் — கோயமுத்தூர்

இராமநாதபுரம் — கோயமுத்தூர்

A C C. மார்க்கை கவனித்து வாங்கவும்.

சபாஷ் திருச்சி!

—ஆசிரியர்

சோழநாட்டில் பெயர் பெற்ற ஊர்களில் பெரியதும் சிறந்ததும் திரிசிரபுரம்தான் என்பது இன்னாள் உண்மை. நகராட்சி ஒழுங்காக நடக்குமாயின் நகர முன்னேற்ற மடைந்து வருகிறதென்பது அர்த்தம். ஒழுங்காக நடக்கும் சில நகராட்சிகளுள் குறிப்பிடத்தக்கவை தென்னாட்டில் கோவை, மதுரை, திருச்சி—நகராட்சிகளேயாகும். திருச்சி நகராட்சி காலஞ்சென்ற இரத்தினவேல் தேவர் காலத்தி லேயே ஓர் மறுமலர்ச்சிகண்டது. அந்தப்பணியை மே லும் வளர்த்து பொதுமக்களுக்கு அன்றுடம் இன்று நல னூட்டி வருபவர் நகராண்மைக் கழகத் தலைவர் திரு. எட்வர்டு பால் மதுரம் அவர்களாவார்கள். தூய உள்ளங் கொண்ட மதுரம் அவர்களும் அவர்களுக்கியைந்து உடன் பணியாற்ற துணைத்தலைவராக G. இராமசாமிக் கோனா வர்களும் திருச்சி நகராண்மைக் கழகத்தின் இரு கண்களெ னக் கூறினல் மிகையாகாது.

நகர மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக வேண்டிய திட்டங்கள் பலவற்றில் அதிமுக்கியமானது இரண்டாகும். உடல் பலமும் உள்ளத்திடமும் அவசியம். அவசியமான உடல் பலத்தைப் பேண சுகாதாரமுறை யைக் கண்காணித்தல். நல்ல உள்ளத்திடம் உண்டாவ தற்கு வயது வந்தோர்க்கும் கல்வியறிவூட்ட வசதி செய்தல். இவ்விரண்டையும் வார்டு கவுன்சிலர்களோடு ஒவ்வோர் வார்டுக்கும் தலைவரவர்கள் நேரிலே சென்று வார்டு மக்க ளின் குறைதீர்க்க ஓயாது பாடுபடுவது வரவேற்கத்தக்கது. இந்த முறையை மற்றைய நகராட்சிக் கழகத் தலைவர்களும் கைப்பற்றினல் நகரமக்கள் ஓரளவு சோதனையான இக் காலத்தில் சுகமாக வாழ இடமுண்டு.

தலைவரவர்கள் உன்னத சேவைக்குத் தடைகளின்றி ஒத்துழைக்கும் மனப்பண்பு படைத்த கௌன்சிலர்களையும் பாராட்டி "சபாஷ் திருச்சி" என்றுதான் சொல்ல விரும்பு

கிறோம் முனிசிபல் கௌன்சிலர்களான உயர்திருவாளர்கள் நம்மாள்வார், டி எஸ். பகவதி, பி எஸ். நஸ்ரூதீன், எஸ். அருணசலஞ் செட்டியார், தயாநிதி, ஊர்துசாமி போன்ற பல நன்னோக்கங்கொண்ட உறுப்பினர்களாக தாம் பெற்றதை குறித்து வார்டு மக்கள் பெரிதும் சந்தோஷப்பட வேண்டியதுதான். 38 வார்டுகள் நிறைந்த திருச்சியிலே 23 வார்டுகளில் பள்ளிகூடமுண்டு. தெருக்களிலே மெர்க்குரி மின்சார விளக்குகள் இரவைப்பகலாக மாற்றித்தருகிறது. இருண்டு கிடந்துமிரளவைக்கும் சுடுகாட்டுப்பகுதியிலும் சுடர்விளக்குகள் பேய் பயத்தை அழித்தன. முனிசிபல் ஆஸ்பத்திரி முறையோடு நடத்தப்படுகிறது. காவேரி நீரைக் குளத்திற்குக்கொண்டுவந்து படகோட்டும் பயிற்சியை இளைஞர்களுக்களிக்க முயற்சி நடந்து கொண்டுவருகிறது.

தென்னுட்டிலே பிரபல வைத்திய நிபுணராக மதிக்கப்படும் பால் மதுரம் அவர்களைத்தலைவராகக்கப்பெற்று திருச்சி நகரம் நாளுக்கொரு நாகரீகத்துடனும், பொழுதுக்கொரு புதுமையுடனும் வளர்கிறது.

எளியவர்பாலிரக்கமும், கடுஞ்சொற்களைந்த குணமும், உதவுவோருக்கு உதவலும் முதலிய நற்பண்புகள் ஒருங்கமைந்த தலைவர் எட்வர்டு பால் மதுரம் அவர்கள் பலநாள் தொடர்ந்து நகராண்மைக்கழகத்தலைவராக விளங்கிபொது சேவை பெரிதும் செய்வாரென பெரிதும் விரும்புகிறோம்.

திரு. இராமசாமிக்கோனரவர்கள் தொடர்ந்து சில— தேர்தல்களாகவே துணை தலைவராக விளங்குகிறரென்னில் அவரது நற்பண்பும், மக்களிடத்துள்ள செல்வாக்குந்தான் காரணம். பயன்கருதாது பதவியைப்பணிக்காக— உபயோகிக்கும் ஒரு சிலரைத்தான் இன்னுள் நாம் பார்க்க முடிகிறது. அத்தகையவரில் நமது இராமசாமிக்கோனர் அவர்களும் ஒருவராவார்கள்.

எடுத்துக்காட்டுக்கு மக்கள் பணிமன்றமாக விளக்கும் திருச்சி நகராண்மைக்கழக நிர்வாக அமைப்பைப்பார்த்து எவர்தான் சபாஷ் திருச்சி! எனச்சொல்லமாட்டார்கள்.

காலம் உமக்கு ஒத்துவராவிட்டால்
நீ காலத்துடன் ஒத்துப்போகவேண்டும் (சீனப்பழமொழி)

மதுரையில் T. V. S. பஸ்சர்வீஸ்.

போக்குவரத்துக்குரிய சாதனங்கள் போதாதென கூக்குரல் உலகெங்கும் கேட்கப்படுகிறது. ஜனப்பெருக்கம் அதிகரித்துவரும் இக்நாளையில் போக்குவரத்திற்குரிய சாதனங்கள் பெருக வேண்டுமென நாடு எதிர்பார்க்கிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்திற்குரிய சாதனங்களில் இன்று பஸ் சர்வீஸ் ஓர் சிறந்த கருவியாகிறது. ஜனசவுகரியத்திற்காகச் சிறந்த பஸ்களை காலாகாலத்தில் ஒழுங்குமுறையுடன் தென்னாட்டில் நடத்தப்படும் பஸ் சர்வீஸ்களில் சிறந்ததென ச்சொல்லப்படும் ஒன்றிரண்டு பஸ் சர்வீஸ்களில் முதன்மையானது T. V. S. பஸ் சர்வீஸ்தான் ஆகும். மதுரையில் டவுன் பஸ் சர்வீஸ் அனைத்தையும் T. V. S. கம்பெனியாரே நடத்துகின்றனர். மதுரையில் சுமாராக 15 நாட்கள் தங்கியிருந்தோம். பதினைந்து நாட்களில் நகர பஸகளில் பல்வேறு ரூட்டுகளில் பயணம் செய்தோம். குறிப்பிட்ட நேரத்தில் எக்குறையுமின்றி பொதுமக்கள் சௌகர்யத்தை அனுசரித்து நகரத்திலுள்ள 72 பஸ்களும் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன. அரசாங்கம் ஏற்று நடத்தினாலும் இவ்வளவு ஒழுங்காக கண்காணிக்க முடியாதென க்கூறலாம். தென்னாடு முழுவதிலும் T. V. S. லாரி சர்வீஸ் S. I. Ry. போல் நடத்தப்பட்டு வருகிறது. ஒழுங்கும், நம்பிக்கையும், நாணயமும், கட்டுப்பாடும் பெற்று T. V. S. பஸ் சர்வீஸ் சிலாகிக்கத்தக்க அளவில் சிறந்த முறையில் நடந்துகொண்டு வருகிறது பெண்களுக்கு தனியிடமும், போதுமான பாதுகாப்பு அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அரசாங்க அதிகாரிகளாயினும் முன்னறிவிப்பின்றி திடுமென சேலம், கோவை முதலிய பஸ்களில் பிரயாணம் செய்வதுபோல் T. V. S. சர்வீஸ்களில் நகரத்திலாயினும் சரி; வேறு பிராந்தியத்திலாயினும் சரி, பிரயாணம் செய்ய இயலாது. நிர்வாகத்திறமையை T. S. கிருஷ்ண அவர்களும், T. S. ராஜன் அவர்களும்செவ்வனே கண்காணித்து வருகின்றனர் அவர்களின் அரிய திறமையால் தான் T. V. S. பஸ் சர்வீஸ் நாளொரு மேனியும்—பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவியாபித்துக்கொண்டு வருதல் கண்கூடு. அப்பழுக்கற்றமுறையில் நடத்தப்படும் T. V. S. பஸ்சர்வீஸின் நிர்வாகத்திறமையை மதுரையில்பதினைந்து நாட்கள் தங்கியிருந்தபோது நேரில் கண்ட அனுபவத்தால் இவையனைத்தும் கூறுகிறோம். (தொடரும்)

சௌந்திரன் மில்ஸ்,

சூ லூ ர்.

நல்லதோர் கம்போடியா
பருத்தி விதை,
நயமான விலையிலே நாங்கள்
தருகிறோம்.

கருங்கண்ணி பருத்தி விதை
வி தை விதைக்க ஏற்றது.
பக்குவமாய் தயார் செய்து
பல ஆண்டுகளாய் விற்று
வருகிறோம்

உழவர் பெருமக்களே

உத்திரவாதமுள்ளது

விபரங்களுக்கு:—

சௌந்திரன் மில்ஸ், சூலூர்.

(கோவை ஜில்லா)

பாண்டிய நாட்டில் ஒரு டோக்யோ!

(தோழன்)

முத்துடையது பாண்டிய நாடு என்பது முதுமொழி. முத்து விளையும் நாடாதலால் செல்வம் அங்கு திருவிளையாடல் செய்யும் என்பது சொல்லவேண்டுவதில்லை. ஒரு காலத்தில் ஓங்கி உயர்ந்து செல்வத்தில் சிறந்து விளங்கிய பாண்டிய நாடு இடையில் சீர்கெட்டு அடிமைப்பட்டு மிடிமையுற்று தவிக்க நேர்ந்தது. அதனால்தான் அங்குள்ள சான்றோர்களை சாணார்ளென சூழ்ச்சிக்காரர்கள் நிலைமாற்றி நிந்திக்கத் தலைப்பட்டனர். குட்டுப்பட்ட சான்றோர்கள் தன்நிலையறிந்து தாம் முன்நிலைக்கு வரவேண்டுமென கறங்கு போல் சுழன்று பழைய நிலைக்கு வரத்தலைப்பட்டனர். வீரஞ்செறிந்து விளங்கும் இராமநாதபுர மாவட்டத்திலே சிவகாசி இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையினும் இருநூறு மடங்கு ஓங்கி விளங்குகிறதென்பது இன்று கண்கண்ட உண்மை. கட்டுப்பாடும், ஓங்கிய முயற்சியும் ஒரு இனத்தை முன்னேற்றச் செய்யுமென்பதை சிவகாசி நாடார் பெருமக்களால் நன்கறியலாம். இன்றய சிறப்பு வாய்ந்த சிவகாசியில் தீப்பெட்டித் தொழிலும், பல நிற அச்சியக்கத் தொழிலும் தலைசிறந்து விளங்குந் தொழிலாகும். சிவகாசியிலுள்ள ஆண், பெண் அனைவரும் தொழிலிலீடுபடுமளவிற்கு தீப்பெட்டித் தொழில் உயரிய ஜீவிதத் தொழிலாக அங்கு நடத்தப்படுகிறது. ஒவ்வோர் பெண்மணிகளும் தத்தம் வீட்டிலேயே தீப்பெட்டித் தொழிலில் பங்குகொள்ளும்படி வசதியளிக்கப்பட்டு காந்தியாரின் குடிசைத்தொழில் பெருவாரியாக ஆதரிக்கப்பட்டுவருகிறது இந்தியாவிலே இணையற்ற முறையில் பெரியதோர் அளவிற்கு லித்தோ பிரிண்டிங் ஒர்க்ஸ் நடைபெறுகிறது. சிவகாசி நகரம் செம்மையுற நலன்பெற நகரசபைத் தலைவர் P. K. S. ஆறுமுகச்சாமி நாடார் அவர்களின் அரிய சேவையைப் பாராட்டாமலிருக்கமுடியாது.

தீப்பெட்டித் தொழில் நிபுணர்கள்

காளீஸ்வரி கலர்மேச் ஒர்க்ஷின் உரிமையாளர் திரு. A. ஷண்முகநாடார்
நேஷனல் கலர்மேச் ஒர்க்ஸ் உரிமையாளர் திரு. P அப்பயநாடார்.
ஸ்டேண்டர்டு பயர் ஹவுஸ் உரிமையாளர் செல்லத்துரை நாடார் & Co,
சிம்கோ மேச் பேக்டரி உரிமையாளர் திரு. C. ஆறுமுகச்சாமி.

முதலிய பிரமுகர்களால் பல தொழிலாளிகளும் அவர் தம் குடும்பங்களும், குடிசைத் தொழிலாகவும், சட்டரீதியான Shop தொழிலாகவும், கொண்டு ஜீவிதம் செய்கின்றனர். மேற்கூறிய தீப்பெட்டிகள் பெருத்த அளவிற்கு வியாபாரமாகிறதென்றால் அவற்றின் தரத்தை நாம் மதிப்பிடவேண்டியதில்லை.

லித்தோ ஒர்க்ஸ்.

நேஷனல் லித்தோ பிரஸ் உரிமையாளர் திரு. K. S அருணகிரிநாடார்
கார்னேஷன் லித்தோ ஒர்க்ஸ் உரிமையாளர் திரு. K. C A. ஞானகிரிநாடார்
பிரிமியர் லித்தோ ஒர்க்ஸ் உரிமையாளர் திரு. K. T V. நடராஜ நாடார்.
ராஜா லித்தோ ஒர்க்ஸ் உரிமையாளர் திரு A சண்முகநாடார்.
நாடார் பிரஸ் லிமிடெட் முதலிய பெருமக்களால்பலதொழிலாளிகள்ஜீவிதம் செய்கின்றனர்.

கைத்தொழில் வளமோங்கி தென்னாட்டு டோக்யோவாக விளங்கும் சிவகாசி சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. முற்கூறிய பெருமக்கள் சிவகாசியை இன்று சிறப்புறச் செய்யும் சீலர்களாக விளங்குகிறார்களென்பது அப்பழுக்கற்ற உண்மை. பொருளுடையார் தொழிலுடையார்க்கு ஆக்கந்தரின் பாலையையும் சோலையாக மாற்றலாமென்பதை சிவகாசிச் சொல்லிக் கொடுக்கும் சிறந்த பாடமாகும்.

"கோவை முரசு"

சூலூர் P. O. (கோவை ஜில்லா)

சந்தா விபரம்.

ஆதரவாளர் சந்தா ரூ	5—0—0	ஆண்டு சந்தா ரூ	3—0—0
உள்நாடு தனிப்பிரதி	0—4—0	வெளிநாடு ,,	4—0—0

விளம்பரம்

வெளி அட்டை ரூ	100—0—0	உள் அட்டை ரூ	75—0—0
சாதா பக்கம்	50—0—0	அரை பக்கம்	25—0—0

அறிவையும் ஆத்மாவையும்
சீர்படுத்துவது நீதி நூல்.

ஆடையைத் தந்து
மானத்தை காப்பது பருத்தி நூல்.

அப்பருத்தி நூலை நூற்பவர்களுள்
முன்னணியில் நிற்பது

★

பங்கஜா மில்ஸ், லிமிடெட்

தபால் பெட்டி நெ 150.

கோயமுத்தூர், (தென் இந்தியா)

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்:—

C. S. இரத்தினசபாபதி முதலியார் & சன்ஸ்

★

"ஒரு பொன் ஏடு" முடிந்து விட்டது!

(அறிஞர் அண்ணாத்துரை எழுதியது)

திடமான உள்ளம், தனது செயலிலே நம்பிக்கை, வெற்றியிலே உறுதி, பொதுப் பணியிலே—வேகம், பொருப்பைச் சுமப்பதிலே—ஆர்வம்,—அவசரத்துக்கு அடிமைப்படாத—அளவு விவேகம், விரோதிகளையும், புன் சிரிப்பால் வீழ்த்துமளவுக்கு அன்பு, தன்னலமற்ற தியாகம் ஆகியவைகளால் பொதுப் பணிக்கு மெருகேற்றித்தந்த செயல் வீரர், குஜராத்சிங்கம், இந்தியத்துணை பிரதமர் சர்தார் படேல்—மறைந்து விட்டார். சுட்டுவிரல் காட்டி, சூதர்களையெல்லாம் மடக்கி இந்திய உபகண்டத்தின் வீரச்சின்னமாக விளங்கிய அவரது கடைசி மூச்சு 15-ந் தேதி காலை 9-37க்கு காற்றோடு கலந்து விட்டது. மாபெரும் மாணிக்கம் அவர் விடுதலை பாதையின் விவேகச்சுடர் சர்தார், உடல் வெந்து, சாம்பலாகிவிட்டது.

75 ஆண்டுகளுக்கு முன் 1875 அக். 31 குஜராத் பூமியிலே கரம்சாத் என்கிற கிராமத்திலே பிறந்த அவரது உடல், பிடி சாம்பலாகி விட்டது! மன்னாதி மன்னர்களையெல்லாம் தனது தலை அசைப்பால் தாழ்ந்திடச்செய்த வீர உருவம்மறைந்து விட்டது. இனி அவரைக்காண முடியாது. உறுதி தவழும் அந்தப்பரந்த முகம்—நம்பிக்கை ஒளி வீசும் அந்தக்கண்கள், எதையும்தாங்கும் இதயம் வேண்டும் என்றுவிளங்கும் அகன்ற நெற்றி, ஆழ்ந்த கருத்துக்களை அனுபவத்தோடு தரும் இதயம்—இங்கில்லை! போய்விட்டது!! நேரு அழுதாரம்! சி. ஆர். மவுனமாகக் கண்ணீர் சிந்தினாராம்!!

தோளாடு தோளிணைந்து, தங்களோடு 35 ஆண்டுகளாக பொதுப் பணி புரிந்த அவரைப்பிணக்கோலத்தில் கண்டபோது—அவர்கள் பட்ட அவதியை எண்ணினால் எவரும் இதயங்கலங்கவே செய்வர்.

இந்தியாவின் தூண் என்றும் பார்தோலி வீரர் என்றும் சர்தார் என்றும் வல்லபர் என்றும் புகழ்ந்து கூறப்பட்ட அப் புருடோத்தமர்—மறைவு கேட்டதும், நாம் கலங்கினோம்—நமது உள்ளம் துடித்தது! 'ஏதோ ஒரு பெரிய அதிர்சி' நம்மைத் தாக்கிற்று!

'பட்டேல் மறைந்தார்'—என்ற செய்தி நமக்கு எட்டியதும், கடந்த 1949 பிப். 23-ந்தேதியன்று சென்னையில் பொதுக்கூட்டமொன்றில் பேசியபோது தெற்கை எப்போதும் மதிப்பவன் நான். உங்களையெல்லாம் எப்போதும் சந்தித்து மகிழ நினைப்பவன் நான். ஆனால் நான் ஏற்ற பொறுப்பு எனக்கு ஓய்வு தரார்து. எனக்கும் வயதாகிவிட்டது. அநேகமாக இதுவே சென்னையை நான்காணும் கடைசிமுறையாகக்கூட இருக்கலாம்" என்று வெளியிட்ட காட்சி, நமது கவனத்துக்கு வந்தது.

பட்டேல்-கொள்கைகள் போக்கு ஆகியவைகள் பலருக்குப்பிடிக்காமலிருக்கலாம்; அரசியல் மாறுபாடுகளின் காரணத்தால். ஆனால் அரசியல் வாழ்வில் ஈடுபட்டோருக்கு— அவரது வாழ்க்கை ஒரு பொன் ஏடு காரியம் சாதிக்க விரும்புவோருக்கு ஒரு காட்சிச்சித்திரம்.

1916-ல் 39-வது வயதில் காந்தீயவாதியானார். 1928-ல் நடைபெற்ற வரிகொடா இயக்கத்தின்போது— பர்தோலி வட்டார குடியானவர்களைத்திரட்டி திறமையாகப்போர் புரிந்தார், சிறைவாசமும், ஆங்கில ஆதிபத்யத்தின் அடக்கு முறைகளும் அவரது வாழ்க்கையில் பல முறை புயல்களை வீசின.

புயல்களைப்புன்சிரிப்போடுஏற்று பொதுப்பணியில் கஷ்டநஷ்டத்தை உணர்த்தினர். புதுப்பொறுப்புகளை தாங்கி, பொதுச்சேவையின்புனிதம் பாதையைக்காட்டினர். மக்கள்— மனதைக்கவர்ந்து மறையாத— மாணிக்கமானர்.

உலகத்தில் பிறக்கும் பலகோடி மனிதர்களுள் ஒருவராகத்தான்— பிறந்தார்—ஆனல் மறையும்போது பலகோடி மக்கள் நலங்கும்படி அவரது வாழ்வு முடிந்திருக்கிறது.

அவர் மறைந்துவிட்டார்' இறப்பும், பிறப்பும் சகஜம்! ஆனல் அவரது மறைவு எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்துகிறது. பொதுச்சேவையில் அவர் கொண்டிருந்த ஆர்வ உணர்ச்சி—அவரை, இந்நாட்டின் 'முடி சூடா மன்னர்' ஆக்கிற்று. மக்கள் இதயத்திலெல்லாம் அவரது நாமத்தை, ஏற்றிவைத்தது.

'மனதில் ஒன்றும் வெளியில்ஒன்றும்' காட்டிக்கொண்டு திரியும், போலி அரசியல் வேடதாரிகள் பட்டேலுக்குப்பரம விரோதிகள். அவர்களைக்கண்டால் சீறுவாராம் அச்— செயல் வீரர்.

காரியத்திலே கண்ணுயிருந்தும்,— அது முடிவதற்கான, தந்திரோபாயங்கள் அத்தனையும் கையாளுவது— அவரது. தனிக்குணம். அத்தகைய மனித மாணிக்கங்கள் பொதுவாழ்விலிருப்போரிடையே தோன்றுவதே, ஒரு நாட்டின் நல்வாழ்வாகும்

விடுதலைப்போரில், அவர்காட்டிய ஊக்கமும் திறமையும் அமோகம்.

அவை விடுதலைக் கிளர்ச்சியிலீடுபட்டிரிப்போரின்சிந்தனைக்கும்செயலுக்கும் உரியவை.

எண்ணியதை முடித்து, எல்லோரது இதயத்தையும் தமது பிரிவால் கலங்க வைத்து விட்டுச்சென்றுவிட்டார். அவரது—பெயர் சரித்திரப் புகழை தாங்கிவிட்டது, அவர் மறைந்துவிட்டார்—அவரது உடல், பிடி சாம்பலாகி விட்டது! ஆனல் அவர் பெயர், தியாகம், பெருமை மறையாது; அழியாது!

வாழ்க அவர் பெருமை!!

கல்யாணம்
மற்ற விசேஷங்களுக்கு
நூல் ஜவுளிகளுக்கு
சிறந்த இடம்

கிருஷ்ண கிளாத் ஷாப்

பெரியகடை வீதி,
கோயமுத்தூர்.

உரிமையாளர்கள்;—

K. கிருஷ்ணசாமி,
V. M. கிருஷ்ணசாமி,

மதுரை மாவட்டத்தில் ஆசிரியர்.

ஆசிரியர்: மாணிக்கம் அவர்கள்.

"கோவை முரசு" பத்திரிகையின் வளர்ச்சியின் பொருட்டும் சொந்த அச்சகம் வாங்குதற் பொருட்டும் நன்கொடை வசூலிக்கும் பொருட்டும் மதுரை மாவட்ட சுற்றுப் பிரயாணம் சென்ற செப்டம்பர் மாதத்தில் துவங்கிய நமது ஆசிரியர் திரு. S. A. மாணிக்கம் அவர்கள் முதன்முதல் திண்டுக்கல் முகாம் செய்தார். முகாமிட்டு இன்முகம் இன்சொலும் மிகப்பெற்ற இளைஞர்திரு. N. சௌந்திரராசனைச் சந்தித்தார்.

திரு. சௌந்திரராசன் திண்டுக்கல் சௌந்திரராஜா மில்லின் செக்ரட்டரியாவார். அவரின் உபசரிப்பை ஏற்று அங்கு சில நாட்கள் தங்கி திரு. *P. K.* சண்முகநாதன் *B. A. B. L.* அவர்களின் உதவிகொண்டு பல சந்தாதாரர்களைச் சேர்த்தார். திரு. சௌந்திரராசன் பத்திரிகைக்கு ஆக்கந்தருவதாக உறுதிதந்து திண்டுக்கல்லிற்கும் மதுரைக்கும் இடையே உள்ள பாண்டியராச புரத்திற்கு வழியனுப்பி வைத்தார். பாண்டியராச புரத்திலுள்ள சர்க்கரை ஆலையின் மானேஜிங் டைரக்டர் திரு. *W. P. A.* சௌந்திர பாண்டியனாரைச் சந்தித்தார். பொதுநலவேட்கைமிகவுடைய சௌந்திர பாண்டியனார் உபசரித்து வரவேற்று விளம்பரந் தந்து வழியனுப்பிவைத்தார். பாண்டியனார் உபசரணையை ஏற்றபின் பழம்பாண்டிப் பதியான மதுரையை ஆசிரியர் அடைந்தார். திரு. பாண்டியன் அவர்கள் எஞ்ஞான்றும் தம்மாலான உதவியனைத்தும் முரசுக்கு அளிப்பதாகக்கூறியதைக் களிப்புடன் ஏற்று மதுரையை அடைந்த ஆசிரியர்

திரு. P. T. ராஜன் அவர்களின் விருந்தாளியானர். முன்னள் அமைச்சரும், பெருநிலக் கிழவரும், பெருந்தகையாளருமான திரு. P. T. ராஜன் அவர்கள் கனிந்த அன்புடன் வரவேற்று நல்விருந்தளித்து பல பிரமுகர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்ததோடு விளம்பரத்திற்காக கடிதந்தந்து உதவி நல்கியதோடு தம்மாலானஎவ்விதஉதவியையும்முரசுக்கு அளிப்பதாக வாக்குறுதி தந்து வழியனுப்பிவைத்தார். விருந்தோம்பல் என்னும் பழந்தமிழ் பண்பாட்டின் வழி நிற்கும் குணவான் P.T. ராஜனெனக்கூறுவோம். வழியனுப்புமுன் மதுரை மீனுக்ஷி மில்லின் மானேஜிங் டைரக்டரும், மற்றும் பல மில்களுக்கு உரிமையாளருமான உயர்திரு. கரு. முத்து. தியாகராச செட்டியார் அவர்களைச் சந்தித்தார் திரு. செட்டியாரவர்களும் தம்முதவியை முரசுக்கு அளிக்கிறேனென உறுதி தந்ததோடு நல்வாழ்த்தும் நல்குவதாகக் கூறி வழியனுப்பிவைத்தார்.

மதுரையைவிட்டு இராமநாதபுரமாவட்டத்தில் உள்ள விருதுநகர் சேர்ந்தார். வியாபார விருத்தியடைந்த விருதுநகரின் பிரபல வியாபாரியும் பொதுநலப் பணியாளரும் செல்வாக்கு மிகப்பெற்றவருமான திரு. V. V. இராமசாமி அவர்களையும் நகராண்மைக் கழகத் தலைவரும் பிரபல வியாபாரியுமான திரு. M .S. பெரியசாமி நாடார் அவர்களையும் ஆசிரியர் சந்தித்து அவர்களின் ஆதரவையும், முழு ஒத்தாசைகளையும் பெற்ருர் ஷை இருவரும் வேண்டுவன செய்வதாக வாக்குறுதியளித்துள்ளார்கள். சீலமும் நற்சிந்தனையுமுடைய திரு. M. A. A. இரத்தினசாமி நாடார் அவர்கள் உதவிய நன்கொடையும், அடுத்துவரும்போது வேண்டுவன செய்கிறேனென்ற பெருந்தன்மையையும் மறக்கற்பாலதன்று. மீண்டும் மதுரை சென்று திரு. சௌந்திர பாண்டியனரின் மருகரான திரு. S. கணேசன் M.A.B.L. அட்வகேட் அவர்களைச் சந்தித்து அவர்களின் ஆசியையும் ஆதரவையும் பெற்ருர். மேலும் மதுரையில் தங்கவேண்டுமென்று ஆசிரியர் விழைந்தபோது எதிர்பாராத உடல் நலக் குறைவால் உடன் ஊர்திரும்பவேண்டியதாயிற்று. மீண்டும் ஆசிரியர் இராமநாதபுரம்-மதுரை மாவட்டச் சுற்றுப்பிரயாணத்தை அடுத்த மாதம் துவங்குவார். ஆங்காங்குள்ள பிரமுகர்கள் பெருநிலக்கிழவர்கள் சஞ்சிகை வளர்க்கும் அச்சக உதவிக்கும் இப்புதிய சுற்றுப்பிரயாணத்தில் ஆசிரியருக்குப் பேராதரவாளர்களாக இருப்பார்களென முழுமனதுடன் நம்புகிறோம்.

–ஆசிரியை

நமது மாபெருந்தலைவர், சென்னிமலை

K. கிருஷ்ண முதலியார் அவர்கள்

திருஉருவப்பட திறப்பு விழா

திண்டுக்கல்.

ராவ்சாகிப் திரு. P. K. சண்முகநாதன் B. A., B. L., அவர்கள் சொற்பொழிவு.

K. கிருஷ்ண முதலியார் அவர்கள்.

கோவை ஜில்லாவில் பிறந்த உங்களுக்குச்சென்னிமலைப்பெருந்தகை திரு. K. கிருஷ்ண முதலியார் அவர்களைப்பற்றி மதுரை ஜில்லா வாசியான நான் சொல்லப்புகுவது— கொல்லத்தெருவில் ஊசி விற்பது என்பார்களே அத்தகையது. ஆயினும் எனக்கு அவர்மீது இருந்த மரியாதையும், அன்பும் மதிப்புமே இப்பணியை ஏற்றுக்கொள்ளச்செய்—தன. அவரோடு நேரில் பழகி பரிச்சயம் அடைந்தவர்களில் பலர் இக்கூட்டத்தில் இருத்தல் கூடும். அவரை நீங்கள் அறிந்த அளவு நான் அறிந்திருக்கவும் முடியாது. எனினும் அவர் ஜீவியத்தில் நம் போன்றோர் கற்றுக்கடைபிடிக்க வேண்டிய படிப்பினைகள் பல உள, என்பதை ஒருவாறு விளக்கிக்காட்டவே நான் முன்வந்துள்ளேன்.

அன்பர்களே! சென்னிமலைப்பெருந்தகை என்றேனே! அவர் ஓர் லக்ஷிய புருஷர். நமது சங்கத்தின் தந்தை. ஓர் தன்னலமற்ற தியாகி. அன்பும் சாந்தமுமே தனது துணையாகக்கொண்டு அரும்பெரும் பணிகள் பல ஆற்றியுள்ளார். அவர் இளமையில் நம் சமூகம் எந்த நிலையில் இருந்திருக்கும் என்பதை ஒருவாறு யூகிக்கலாமேயன்றிவிவரித்து பெருக்க மனம் இடம் கொடுக்கவில்லை. பிற வகுப்பினரால் கொடுமைப்படுத்தப்பட்டுத் தன் மதிப்பிழந்து ஏழ்மை நிலையில் இருந்த ஓர் சமூகத்தை ஒரு தனிப்பட்ட மனிதன் தனது ஆர்வத்தால் முன்னேற்றமடையச்செய்தார் என்றால், அவரைப்பற்றி நாம் எந்த வகையில் கொண்டாடுவது என்று சொல்ல முடியும்? அவர்போன்ற மகான்களைத்தான் வள்ளுவர் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்று சுட்டிப் போந்தார்.

சற்றேறக்குறைய 80 ஆண்டுகளுக்கு முன் நம் மரபினர் செய்த

P. K.* சண்முகநாதன் *B. A. B. L,

தவப்பயனாய் முருகன் குன்று தோராடியஸ்தலங்களில் ஒன்றான சென்னிமலை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் திரு. முதலியார் பிறந்தார். சாதாரணமானகுடும்பம். அதாவது மிகுந்த செல்வந்தர்கள் அல்ல. தனது 20வது வயதில் பெற்றோர்களையும் இழந்தார்.

அவர் குடும்பம் இப்பொழுது— இருக்கும் நிலையில் அப்பொழுது இருக்கவில்லை. ஆனால் தன்சொந்த உழைப்பினாலும், நேர்மையாலும்— தன் குடும்பத்தை மட்டுமல்ல, நமது சமூகத்தையும், தாம் பிறந்த ஊராகிய சென்னிமலையையும் முன்னணியில் கொண்டுவந்தார்.

ஏதோ படத்திறப்புவிழாவில் புகழ்ந்து பேசுவது சம்பிரதாயம் என்ற முறையில் நான் பேசவில்லை. இக்காலத்தில் யாருக்கும் படத்திறப்பு விழா. நடத்துவது சர்வசாதாரணமாய் இருப்பதுபோன்றதல்ல இவ்விழா உண்மையிலேயே இந்தக் கௌரவத்தை திரு. முதலியாரும், அவர் குடும்பத்தினரும் வகிக்கத் தகுதியுடையவர்கள்.

திரு. முதலியார் உயர்தரப்படிப்புப்பெற்றவரல்ல. ஆனால் அக்காலத்தில் கிடைக்கக்கூடியதும் இக்காலத்தில் மறைந்துபோனதுமான திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வி தான்— அவர் கற்றது அக்காலத்தில்நிகண்டு குறள், நாலடியார், தேவாரம், அரிச்சுவடி முதலியது. எல்லாம் மனப்பாடம் பண்ணி ஒப்புவிக்க வேண்டும். இல்லாவிடில் உபாத்தியாயரிடம் வாங்கும் தண்டனைக்கு கணக்கே கிடையாது. எனக்குத்திண்ணைப்பள்ளிக்கூட அனுபவம் உண்டு அக்காலத்துகல்வி, மக்களை மனிதராக்கியது. இகபர சாதனங்களை நல்கியது. திண்ணைப்பள்ளிக்கல்வி பயின்ற நம் முதலியார் பின்னால் தன் சொந்த உழைப்பில், தமிழில் நல்ல ஆராய்ச்சி செய்து பயிற்சி அடைந்தார். தேவார திருவாசகம் கம்பராமாயணம், திருவாய்மொழி, முதலிய நூல்களை நன்கு கற்றுணர்ந்தார். நம் மரபைச்சேர்ந்த பவானி ராமாம்ருதம் நமச்சிவாய முதலியாரின் கம்பராமாயணப்பிரசங்கம் நம் மகாநாடு ஒன்றில் நடைபெற்ற— போது முதலியார் அவர்கள் என்னுடன் அதுபற்றிப்பேசின சமயம்— எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடிய முறையில் சிலவிஷயங்களைச் சொன்னார். தமிழ் மட்டுமன்று, தெலுங்கும் எழுதப்படிக்கத்தெரிந்தவர் அவர் கவிஞர்களையும், புலவர்களையும் ஆதரித்தார். நிறைந்த தெய்வபக்தி உடையவர். சந்நியாசிகளை ஆதரிப்பதில் விசேஷ ஆர்வமுடையவர். பல கோவில்களைப்புனருத்தாரணம் செய்ய ஹேதுவாகவும் இருந்தார். பல தான தர்மங்களைச் செய்தார். சென்னிமலைத்தல புராணத்தைத்தேடி எடுத்து அச்சிட்டார்.

முதலியார் அவர்கள் அக்காலத்திலேயே தீவிர தேசபக்தி உடையவர் தன் சமூகம் அடிமைப்பட்டுக்கிடந்ததை விடுதலை அடைய வழி காட்டினவர். 25 வயது முதல் பத்திரிகை வாசிப்பதில் ஒவ்வொருநாளும் சில மணிநேரத்தை கழிப்பார். சுதேசமித்திரன், லோகோபகாரி, ஹிதகாரிணி முதலிய அக்காலப்பத்திரிகைகளைத் தருவித்துப்படித்தார். தேச பக்தர்களின் சரித்திரங்களை வாசிப்பதிலும், கேட்பதிலும் விசேஷ ஆர்வம் காட்டினார். ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், ராமலிங்கஸ்வாமிகள், தாதாபாய்நவரோஜி, சுரேந்திரநாத் பனர்ஜி, திலகர் முதலியவர்களுடைய சரித்திரங்களைப்படிப்பார் அக்காலத்து தேசபக்தர்களான ஸ்ரீ சுப்ரமண்ய அய்யர், சுப்ரமண்யசிவா இவர்களோடு நேரில் பழகி அவர்களுக்குப் பொருளுதவியும் செய்தார்,

சென்னிமலை இன்று ஓர் வியாபார ஸ்தலமாயும் கைத்தொழில்— ஸ்தலமாயும் இருக்கின்றதுஎன்றால் அதற்குக்காரணம் நம் முதலியார்— அவர்களே என்றால் மிகையாகாது. பெற்றோர் கள் இறந்தபின் ஓர் நண்பருடன் கூட்டு வியாபாரம் சிறிய அளவில் ஆரம்பித்தார். முதலியார்- அவர்களுக்கு இயற்கையில் அமைந்த லௌகிக பிரக்ஞையும் பொது அறிவும் நேர்மையும் கல்வியும், வியாபாரத்தில் வெற்றியளித்தன பின்னர் 1911-ம் வருஷக்தில் முதன் முதலாகச்சென்னிமலையில், பஞ்சு அரைக்கும் ஆலை ஸ்தாபித்தவர் அவரே. இதன் பின்னரே இந்த ஜில்லாவில் அது முக்கியதொழிலாக வளர்ந்தோங்கியது வியாபாரம்— முன்னேறியது. அவர் பல்வேறு வியாபாரத்தில் ஈடுபட்டுளடுத்தாலும் கிருஷ்ண முதலியாராகவே பரிணமித்தார், சென்னிமலையில் சாயத் தொழில் ஆரம்பித்து நடத்திக்காட்டினார். மளிகை வியாபாரம், இரும்பு வியாபாரம், ஜவுளி வியாபாரம்' மொத்தக்கட்டு தானிய வியாபாரம், இவ்வளவையும் வைத்துச்சமாளித்தார். எதிலும் வெற்றி காரணம் அவருடைய நேர்மை, மனிதர்களை வசியம் செய்யும் சக்தி அவருக்கு உண்டு. அவருக்கு கெடுதல் செய்ய தீர்மானம் செய்துகொண்டு ஒரு ஆசாமி வருவான். அவரிடம் சிறிது நேரம் பேசினால் அவருடைய தாசானு தாசனாகிவிடுவான். இது நான் என் அனுபோகத்தில் கண் கூடாக கண்ட அதிசயம்.

நமது முதலியார் ஓர் வள்ளல். கருணையின் உருவம். ஒருவர் துன்புற சகியாதவர். அந்தக்காலத்தில் இந்த ஜில்லாவிற்கு இப்போது இருக்கும் முன்னேற்ற சாதனம்எதுவும் இல்லை. அடிக்கடி பஞ்சம் வரும். வெளிஜில்லாக்களிலிருந்து சோளம் முதலிய தானியங்களைவரவழைத்து கடனாக விநியோகம் செய்வார். ஏழைகள் வீட்டு கல்யாணங்களுக்கும் இதர காரியங்களுக்கும் தக்க சமயத்தில் பொருளுதவி செய்வார். யாரிடமும் ஆதரவு காட்டி அன்புடன் பழகுபவர். பணத்தைப்பிரதானமாக எண்ணுபவரல்ல. யாருக்கு என்ன உதவி தேவையோ அதைத்தயங்காமல் செய்வார். அதனால் தனக்கு ஏதாவது இடைஞ்சல் விளைந்தாலும் பொருட்படுத்தவும் மாட்டார். பின்வாங்கவும் மாட்டார். ஆனால் யாரிடமும் குற்றம் என்று கண்டால் கண்டியாமல்— விடார். தயை தாக்ஷண்யம்பாராது பிறர் குற்றத்தைக்கண்டிப்பார். பல சிக்கலான விவகாரங்களை லகுவாக உபயதரப்பாரும் ஏற்றுக்கொள்ள ஏற்றுக்கொள்ளும் முறையில் தீர்த்துவைப்பார்.

நமது சமூகத்தாரில் முதன் முதலாக வியாபாரத்தொழிலை ஆரம்பித்தவரும் நம் முதலியார்தான். நம்மவர்கள் அக்காலத்தில் எப்படி இருப்பார்களென்று நீங்களே யூகித்

துப்பாருங்கள். நமது சமூகம் இரு
ந்த நிலை முதலியாரைத்துயரத்தில்
ஆழ்த்தியது. மனம் வெதும்பிப்
புலம்பினர். தனது உபஸான தெய்
வமாகிய முருகனிடம் முறையிட்
டார் பல நாட்கள்தூக்கமின்றி இந்
தப்பிரச்சினைக்கு ஒரு வழி காண
முயன்றார். பல நண்பர்களோடு—
கலந்து பேசினர். பிறவருக்தனரா
கிய கலந்து பேசினர். பிறவகுப்பி
னரேயல்லாமல் நம் வகுப்பினரே
அவரை எள்ளி நகையாடினர். முத
லியார் பகற்கனவு காண்கிறார் என்
றனர். அத்தோடு நிற்கவில்லை, எதி
ர்ப்புக்கு ஆரம்பித்தார்கள். போலீ
ஸ் பிராதுகள், கலகங்கள் எல்லாம்
நடந்தன. 1913-ம்வருஷத்தில்சென்
னிமலையில் தனது இல்லத்தில முரு
கன் திருவருள்பெற்று விரல்விட்டு
எண்ணக்கூடிய அளவில் சிலர்கூடி
சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்
கள். அதில் அவரோடு பங்கெடுத்து
கொள்ள முன்வந்தார் திரு. E. T.
பாலகிருஷ்ண முதலியார் சங்கம்
துவக்கமான சில வருக்ஷங்கள்வரை
பல இன்னல்களை எதிர்த்து நிற்கும்
நிலையிலேயே இருந்தது. எதிர்ப்பு
இருக்கும் அளவிற்கு ஆர்வம் இல்
லாவிடில் சங்கம் மடிந்துபோயிருக்
கும் அல்லவா? நமது முதலியார்
வீர புருஷர் எதிர்ப்பு அதிகமாக
ஆக ஆர்வமும் அதிகமானது. சங்கு
சுட்டாலும் வெண்மைதருமன்றோ?
மேலும் நன்மையான காரியங்களு
க்கு ஏதிர்ப்பு ஏற்படுவது இயல்பு
தானே. எத்துணை இன்னல் வந்தா
லும் சளைக்காமலும், ஊக்கத்தை
கைவிடாமலும்தன்னலமற்றதியாக
புத்தியுடனும் சங்கத்தைக்கண்ணும்
கருத்துமாய்ப்பார்த்து நமது சமூகத்
தை முன்னேற்றமடையச்செய்த—
பெரியார் இவரே. அன்று நம்மவ
ரில் 100-க்கு 99 குடும்பங்கள் பரம
ஏழைகள் படிப்பும் இல்லை. தன்
மதிப்பு என்பதே அறியாத பாமரர்
கள், இன்று இந்த ஜில்லாவில்
பெருத்த தனவந்தர்கள், ஆலை முத
லாளிகள், வியாபாரிகள் மத்யதரத்
தவர் பலர் இருக்கின்றனர், ஏழை
களும் இல்லாமல் இல்லை ஆனல்
வருவாயிக்கு இடம் இருக்கின்றது.
கொஞ்சம் படித்தவர்களும் இருக்
கின்றனர். நமது சமூகம் இப்பொ
ழுது இருக்கும் நிலைமைக்கு வழி
காட்டியவர் நமது முதலியார் அவர்
களே, அவருக்கு துணையாக இருந்
தவை முருகன் அருளும், அவரு
டைய சாந்தமும், அன்பும், நேர்மை
யுமே. நமது சமூதாயத்தின் தந்
தையென்று ஆரம்பத்தில் சொன்
னேனே அது மிகையல்ல. அவர்
தான் முதல் தலைவர் முதல் தந்தை
25 வருஷங்கள் தலைவராய் இருந்
தார். வெள்ளி விழாவும் நடத்தி
னோம். தாம் கொண்டலக்ஷயத்திலே
வெற்றி பெற்றார் தீய பழக்கவழக்க
ங்கள் அறவே ஒழிந்தன. நம்மவர்
பலர் பெருங்குடிமககளாயும், வியா
பாரிகளாயும், உத்தியோகஸ்தர்க
ளாயும், தேசபக்தர்களாயும் திகழ்
வதைக்கண்டு பெருமிதம் அடைந்
தார். 25 வருஷகாலமாய் நமது
சங்கத்தின் ஜீவநாடியாக இருந்தார்.
எல்லாத்துறைகளிலும் நமது சமூ
கம் துன்னேற்றமடைய வழிகோலி
னார். சங்கத்திற்காகத்திரேகப்பிர
யாசைமட்டுமல்ல அந்தக்காலத்தில்
பண உதவியும் எவ்வளவோ செய்
திருக்கிறார். இத்தகைய பெருந்
தகையின் பூத உடம்பு மறைந்து
இன்று 5 வருஷங்கள் ஆகின்றன,
ஆனல் அவர் நிறுவியதிட்டங்களும்
செய்த முயற்சிகளும்நமக்குப்பயன்
அளிக்கின்றன. அவருக்கு நாம்செய்
யும் நன்றி இப்படத்திறப்பால்மட்
டுமல்ல அவருடைய லக்ஷியங்களை
இன்னும் பூரணமாக அடைய முய
லவேண்டும். நமது சமூகத்தைக்
கல்வி, வியாபாரம் முதலிய துறை
களில் இன்னும் முன்னேற்றமடைய
செய்யவேண்டும். அவருடைய—
உழைப்பின்பயனை நாம் அனுபவிப்
பது மட்டும்போதாது. அவர்வழி
யைப்பின்பற்றி சமூகத்திற்கும்,—
தேசத்திற்கும் அவர்போன்று ஆர்
வத்துடன் உழைக்கவேண்டும்.—
அதுவே நாம் அவருக்குக்காட்டும்
நன்றி. இந்தப்பணியை எனக்கு
ஈந்து என்னைக்கௌரவித்த இச்சங்
கத்தாருக்கு என் நன்றி.

இன்ஷ்யூரன்ஸ்

★

எமது

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து முதலிய இன்ஷ்யூரன்ஸ் — திட்டங்களுக்கும் லாபகரமான ஏஜென்சி — விபரங்களுக்கு

எழுதுக:

★

Tel: PROTECTION Phone. 121.

பயனீர் பயர் & ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ் — கோயமுத்தூர்.

இதற்கா எங்கள் தியாகம்?

(தோழன்)

திராவிட முன்னேற்ற கழக அமைப்பு முறை பற்றி எழுதுவதற்கும் எடுத்துப்பேசுவதற்கும் உனக்கெங்கிருந்து உரிமை கிடைத்தது என எம்மைக்கேட்கும் திடீர் தி.மு. கழகத்தோழர்களின் கதறலுக்குப்பதில்கொடுக்க அழகிரி சாமியின் பரம்பரையான நாம் அஞ்சமாட்டோம் என்பதை சொல்லித்தெரியவேண்டுவதில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முந்தியும்—திராவிடகழகம் அமைவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பும்—தென் இந்திய நல உரிமைச்சங்கம் சுயமரியாதைக்காரர்களிடம் வந்து சரணு கதியடையுமுன்பும்—தமிழ்நாடு தமிழருக்கே என்ற அரசியல் தாரக மந்திரம் உச்சாடனம் செய்வதற்கு முன்பும்—தென்னுடு பிடிங்கித்தின்னும் பேயர்களின் பித்தலாட்டக் கூட்டமாகக்கூடாதென வன்மையாகக்கண்டித்த எமக்கு உரிமையில்லை என்ருல் எம்மைக்காரணமின்றி காவாலித் தனமாக பேசித்திரியும் நேற்று முளைத்த காளான்களுக்கு கட்சியைப்பற்றிச்சிந்திக்க என்ன உரிமையிருக்கிறது?

1924-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இதுவரை பொது நலப்பணிக்காக பற்பல சிரமங்கள், பற்பல தியாகங்கள், பலவித இன்னல்கள் ஒருங்கே அனுபவித்த எம்போன்ருரை ஏளனம் செய்யும் எத்தர்களுக்குச்சரியான பதில்—கொடுக்க நாம் பின் வாங்கப்போவதில்லை. கடந்தகால்—நூற்ருண்டுகளாக கட்சியின் வளர்ச்சிக்காக உயிரைப் பணயம் வைத்து பல்வேறு இன்னல்களை அனுபவித்த—காலத்திலும், கட்சியின் பெயரால், நாம் வயிறு வளர்த்த தில்லை, வயிறு வளர்க்குமாறு எண்ணியதில்லை, எண்ணப் போவதுமில்லை, கட்சியின் பெயரால் செல்லாத செம்புக் காசுகூட இதுவரை வாங்கியதில்லை. இதனை சரிவர நன் குணரா ஈயக்காசுகளும், பிட் நோட்டீசுகளும், நம்மீது வம்படியாகப்புகார்களைக்கிளப்பித்தங்கள் குற்றங்களைமறைக்க முயல்வது அறிவீனமாகும்.

தி. மு. கழக அமைப்புமுறை ஏட்டளவிலே, அதைவிட பிரச்சார அளவிலே, மாற்றுயர்ந்த பொன்போல் பிரகாசிக்கிறது. கழக அமைப்புமுறைக்கு ஆணையாளராகயிருந்து நடத்தும் ஒரு சில சுயநலமிகளால் கழக அமைப்பு முறையைக்கண்டிக்கத்தகுந்த நிலையிலே இன்று தி மு. கழகம் இருக்கிறதென்பதை எவருமறிவர். வீண் விளம்பரத்தாலும், கைப்பாவைகளை வைத்து ஒரு சிலரின் பெயரை மாநாட்டில் உச்சாடனம் செய்வதாலும் கழக முறைகம்பெனிக்கு ஒரு சிலபேர் டைரக்டர்களாகிவிடுகின்றனர். இப்புது கம்பெனியின் புது டைரக்டர்களால் கழக அமைப்புமுறையின் அஸ்திவாரமே ஆட்டங்காண்கின்ற அளவுக்குநிலைமை சரிந்து வருகின்றதென்பதை நாம் நன்குணர்கிறோம்.

"சிறுவரிட்ட வெள்ளாண்மை வீடு வந்து சேராது" என்பது பழமொழி. சிறுவர்களிட்ட வேளாண்மை விளையும், நல்ல மேனியுங்கண்டிருக்கும், ஆனால் விளைவின் பயனை வீட்டோர் அனுபவிக்க முடியாது. இதுபோன்றுதான் நல்ல முறையில் பிரச்சாரகர்கள், ஒரு சில பணியாளர்கள் தி. மு. கழகத்திற்குக்கிடைத்தும்கூட திறம்பட நடத்தி வெற்றி காண்பதற்கு வழியில்லாமற் போயிற்று நிர்வகிக்கச் சரியான ஆளின்மையால். எடுத்துக்காட்டாக கோவை மாவாட்ட தி. மு. கழக மாநாடு கனியூரில் நடந்ததைக்கூறலாம். மாநாடு நடந்தவிதமும், கணக்குப்பரிசீலனையும் எம்முறையில் நடந்ததென்பதை நாம் கூற வேண்டியதில்லை.

பெரியார்-அண்ணா பிரிவினையிலே பிறந்த ஓர் உத்வேக உணர்ச்சிதான் தி. மு. கழகத்திடை தலைநாள் தோன்றி புதிய சோபையுடன் பிரகாசித்தது. அவ்வுணர்ச்சி பின் சோடா பாட்டிலாக மாறிற்று. சோடா பாட்டிலுடைத்தவுடன் (Gas) குமுறி நீருடன் பாட்டில் விளிம்புகளின் வாயிலாக வழிந்தோடும். சிறிது நேரத்தில் (Gas) சென்றவுடன் சோடாநீர் பச்சைத்தண்ணீராகதென்படுவதைப்போலவே இன்று தி. மு. கழகத்தின் வேகம் மின்னல் வேகத்திலிருந்து ஆமை வேகமாக மாறியுள்ளது. மேலும் சொல்ல வேண்டின் நிர்வாகத்திறமை, சிவில் சப்ளை இலாகாவின் நிர்வாகத்தைப்போல (போட்ட மனுவிற்குப்பதில் கிடைக்க காலதாமதம் பிடிக்கும்) நத்தை வேகத்திலிருக்கிறது.

வெறும் பேச்சாளராகயிருப்பதைவிட நல்ல செயலாற்றும் வீரர்களாக விளங்குவதுதான் சிறந்தது. தி. மு. கழகத்தில் அண்ணாத்துரைபோன்ற திறமைசாலியும், நல்லவர்களுமிருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சியில் ஜவஹரைப்போல.

ஒரு சிலரிடத்தில் வஞ்சனை மிஞ்சிக்கிடக்கிறது. சுயநலம் தலைக்கேறியுள்ளது, பித்தலாட்டம் மண்டிக்கிடக்கிறது.

அறிஞர் அண்ணாத்துரை இதனையறிந்தும் மௌனியா யிருப்பதேனோ? தி. மு. க. வின் போக்கு வெடிக்க முடியாத புதிராகயிருக்கிறது. அண்ணா அவர்கள் நிலைமையை உணர்ந்து தக்க நடவடிக்கைகளெடுத்துக்கழகத்தைப்பலப் படுத்துவாரா?

கோவை மாவாட்டத்தைப்பொறுத்தே இத்தனையும் நாம் கூறுகிறோம்! கோவை மாவட்டத்திலே முளைத்த தி.மு. கழகங்கள் உறுப்பினர்களிடையே எழுந்த மனக்குழப்பத் தால்-பெரியார் கூறிய பொன்மொழிபோல செயலாளர் களின் சதிச்செயல்களால் நேற்று முளைத்த கழகங்கள் இன்று கருகிக்கிடப்பதைக்காண்கிறோம்! இதற்கு உதார ணம் திருப்பூர் கழக சம்பவமே போதுமானதாகும்.

கோவை திருப்பூர் போன்றே இன்னும் பல ஊர்களில் கழகத்தில் கலகங்களும், குழப்பங்களும், பூசல்களும் நிர்வாக ஊழல்களும், மலிந்திருப்பதைக்காண்கிறோம் இதைக்கா ணும்போது உண்மையான உழைப்பாளிகளின் உள்ளம் உலைப்பானையென உறுமாதா? இந்நிலை மாற வேண்டின் சீர்பட வேண்டின்-நன்னிலையடைய வேண்டின் உறுப்பி னரிடை ஒழுக்கம்-நிர்வாகிகளிடம்நேர்மை-செயலாளரிடம் நீதி-பொருளாளரிடம் நாணயம் அமைய வேண்டும். தி. மு. கழகத்தின் மேலிடம் கோவை மாவாட்டத்திலுள்ள தி. மு. கழகங்களிடைக் கொந்தளித்துள்ளபுண்ணை ஆற்றாவிடில்— வீணுக்குழைத்தோமடா தோழா. என்ற அவலச்சிந்தைப் பாட நேரிடும். இவ்வளவையும் நம் துவேஷத்தால் துரோ கச் சிந்தனையால் சித்தரிக்கவில்லை. நாமிருந்த வீடு பாழா கிறதே என்ற பச்சாதாபத்தால் தீட்டவேண்டியதாயிற்று நல்ல நிலைமை எய்தி தி. மு. க. தன்னுடைய லட்சியபுரிநோக் கிப்பயணம் செய்யவேண்டுமென்பதுதான் நமது தணியா வேட்கை பல தடைவைகள் இம்மாவட்டத்தின் தி. மு. கழக ங்களின் போக்கைப்பற்றி நேரிலே அண்ணா அவர்களிடம் எடுத்துக்கூறியும் நிலைமை நேர்மைப்பட அவர் ஒன்றும் செய்யாமலிருப்பது வருந்தத்தக்கதே. கோணற் பாதையிலே ஓடிக்கொண்டிருக்கும் கோவை மாவாட்ட தி. மு. கழகங்களின் ஓட்டத்தை தடுத்து சீரிய முறையிலே செல்ல அண்ணாத்துரையும் அவரது அசோசியட்சும் பாடு பட்டு நமக்குப்பலனளிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

(தொடரும்)

புயல்காற்று

கோவை டவுன் பஸ் சர்வீஸ்

[புயல்]

பொது ஜனங்களின் சௌகர்யத்தின் பொருட்டு கோவை போன்ற பெரும்நகரங்களில் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி செல்லும் போக்குவரத்துப்பிரயாணிகள் நலத்திற்காக ஏற்பட்டது டவுன் பஸ் சர்வீஸாகும். கோவை டவுன் பஸ் சர்வீஸ் நடத்தும் கம்பெனிகளில் மிகவும் ஊழல் மலிந்தது M.C.S. Coy-யாகும். பொதுஜன சௌகர்யத்தை சிறிதேனும் கவனியாமல் பொருளீட்டிப் பெரும் இலாபம் சம்பாதிப்பதிலேயே தன் முழுக்கவனத்தையும் M.C.S. Coy செலுத்துகிறது. முதலிட்டவர்கள் லாபத்திற்குரியவர்கள் எனினும் பிரயாணம் செய்யக் காசு கொடுக்கும் பிரயாணிகளும் தாம்செல்லும் பஸ்ஸில் தங்களுக்கு சௌகர்யம் தேவையெனக் கருதுவது தவறெனச் சொல்லமுடியாது.

ஓடும் M. C. S. பஸ்களில் கண்டனத்துக்குரியவைகள் பலப்பல உண்டு. போக்குவரத்து விரைவிலும் தடைபடாமலும் நிகழவேண்டுமென்ற நோக்கத்திற்காக வழங்கிய சர்க்கார் ரூட்டுகளில் பாதி வழியில் பஸ் நின்று பிரயாணிகளுக்குத் தொல்லை கொடுக்கும் துயர கீதத்தை அதிகாரிகள் அகற்றவேண்டும். சான்றாக 5-நெ பஸ் நெ. M. D. C. 3500 திருச்சி ரோட்டில் நாடார் காலனியருகே 9-6-50-ல் இரவு 8-மணிக்கு (கடைசி Trip) ஒருமணி நேரம்வரை நகராமலே நின்றுவிட்டது. பாதிப்பிரயாணிகள் வேறு பல பஸ்களில் கட்டணத்தொகையைச் செலுத்தி பிரயாணம் செய்தனர். வேறு பலர் கால் நோக நடந்து தத்தம் வீடேகினர். அதே Coy-யின் 6-நெ. பஸ்களில் சில Y. M. C. A.-க்கருகாமையில் (Strating Truble) ஆல் நின்றுவிடுவதும் பின் பிரயா

ணிகள் முனிசிபல் ஹைஸ்கூல்வரை தள்ளுவதுமாகயிருப்பது கண்கூடு சிலச்சில வேளைகளில் 3-நெ பஸ்களில் அதிகப்படியான பிரயாணிகளை ஏற்றுகின்றனர். கண்டிஷன் அற்ற பஸ்கள் பல ஓடுவதால் பிரயாணிகள் அல்லற்படும் பாட்டிற்கு கணக்கேயில்லை. சென்ற மாதம்வரை அதிகப்படியான பேர்களை (Over Load) ஏற்றிச் சென்ற சில Coy-கள் இப்போது ஏற்றுவதில்லை. முதலாளிகள் மன மாற்றத்தின் விளைவா? அதிகாரிகளின் கண்டிப்பா? என்பது தெரியவில்லை. அதிகப்படியான பிரயாணிகளை இதுபோல் காலமெல்லாம் ஏற்றுமலிருப்பார்களா? மதுரை சென்னை போன்ற நகரங்களில் ஓடும் பஸ்களில் குறுக்கு சீட்டுகள் கிடையாது. குறுக்கு சீட்டுகள் இருப்பினும் நடை பாதையை அடைக்குமளவிற்கு சீட்டுகள் கிடையா!

சராசரி நடுத்தர உயரமுள்ள எந்த மனிதனும் தடையில்லாமல் பஸ்களில் ஏறியிறங்குமளவிற்கு பஸ்களின் உயரம் அதிகப்படியாக இருக்கவேண்டும். டவுன் பஸ்களில் சில அரசாங்க அதிகாரிகள் இலவசமாக அடிக்கடி பிரயாணம் செய்கின்றனர். எப்போதாவது இன்றியமையாத் தேவையைக் குறித்து அதிகாரிகள் இலவசப் பிரயாணம் செய்வதைக் கண்டிக்கமுடியாது. ஒரே பஸ்ஸில் ஏழெட்டு பேர்கள் ஏறி இலவசப் பிரயாணம் செய்தால் பிரயாணிகள் கஷ்டப்படுவது இயற்கை. அதுமட்டுமல்ல ஆபீஸ் அலுவல்களுக்குச் செல்லவேண்டிய பல அதிகாரிகளும், பள்ளிக்குச் செல்லும் பல மாணவ, மாணவிகளும் பிரயாணம் செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். எப்போது அதிகாரிகள் அடிக்கடி இலவசப் பிரயாணத்தைப் பெருக்கிக்கொண்டு போகிறார்களோ, அப்போது கம்பெனியாரோ, அல்லது கம்பெனி அறியாமல் பணி ஆட்களோ 'ஓவர் லோட்' போட்டு பிரயாணிகளை தொந்தரவுபடுத்துவது இயல்பு. பொதுஜன நன்மையைக் குறித்து அதிகாரிகளும், பஸ் முதலாளிகளும் தார்மீக உணர்ச்சியுடன் நடந்துகொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் இராமநாதபுரத்தில் ஏற்பட்ட விபத்துப் போல கட்டுப்பாட்டிற்கு பயமற்று பஸ்ஸை விரட்டி பிரயாணிகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டாலும் விடலாம்! ஓரளவு ஜனங்களின் நன்மையை பஸ் முதலாளிகள் கவனித்துத்தான் தீரவேண்டும். கண்டனத்துக்குரிய பஸ்களை சர்க்கார் அகற்றித்தான் தீரவேண்டும். தியாகபுத்தி செங்குருத்தென வளருமா?

(தொடரும்)

ஸ்தாபிதம். 1935 ஓம் ESTD 1935.

ஸி. ஆர். ஆர்.

இங்கிலீஷ் பிரிபரேடரி ஸ்கூல்

ராஜ வீதி ★ கோயமுத்தூர்.

தமிழில் தேர்ச்சியுள்ள
ஆண், பெண்,
குழந்தைகளுக்கு
ஒரே வருஷத்தில்
இங்கிலீஷ், ஹிந்தி, தமிழ்,
கணக்கு சரித்திரம் பூகோளம்
பொது அறிவு, முதலிய
பாடங்களை கற்பித்து
(III Form) 8-வது வகுப்பு
வரையில் ஹைஸ்கூலில்
சேர்க்கப்படும்.

14 வயதிற்கு மேற்பட்ட
ஆண், பெண்களுக்கு
ஒரே வருஷத்தில்
எல்லா பாடங்களையும்
கற்பித்து ஈ. எஸ். எல். ஸி.
(E. S. L. C.) கவர்மெண்டு
பரீட்சைக்கு அனுப்பப்படும்.
அயலூர் ஆண், பெண்
குழந்தைகளுக்கு
(ஹாஸ்டல்) இடம்

ஆகார வசதிகள் உண்டு.

வருஷத்தில் எந்த பாடசாலை நாட்களி லும் புதிதாக மாணவ மாணவிகளை சேர்த்துக்கொள்ளப்படும்.

C. R. R. ENGLISH PREPARATORY SCHOOL

Raja Street COIMBATORE.

C. R. R. Swamy, Manager.

பெண்கள், நெற்கதிர் அடிக்கும் காட்சி. (பொங்கல் புதுநாளில் மங்களம் பொங்குக.)



பாச வலை

ஆசிரியை
S.P. மீனாட்சி அம்மாள்

சொல்லப்படுமோ?

சொல்லப்படுமோ படித்த இளந் தளிர்கள் பட்ட பாடு! காலை முதல் மாலைவரை உடலைத்திருகி உழைப்பாய் பிழிந்து ஊதியம் சம்பாதித்து வயிறு வளர்த்தனர் மாறுபட்ட முரண்பட்ட காரியங்கள் காரணமின்றி உலகில் நடமாடுகின்றன. ஜன சமுதாயத்தில் தொல்லைகளும் துயரமும் தர பல சூழ்நிலைகளை உற்பத்தி செய்ய தனக்குப் பக்கபலமாக யிருப்பவர்கள் செய்து விடுகிறார்களென்பதை எவரும் மறுக்க முடியாது. அந்தத் தவறை பெரிதெனக் கூறிக்கொண்டே போனால் ஜனசமூதாயதில் சாந்தியே அருமையானபொருள் ஆகிவிடுமே.—அமைதியும் ஆனந்தமுமதாண்டவமாட குற்றத்தை மன்னிப்பதே சால சிறந்ததாகும்

அணுகுண்டு அழிவின் காரணமாக அமைந்ததைக்கொண்டு விஞ்ஞானமே வேண்டாமெனக் கூறுவது எப்படி பொருந்தாதோ அதே போல் குற்றம் செய்தவர்மேல் குரோதத்தையே எண்ணி அவரை அழிக்க காழ்சினம் கொள்ளும் போது அம்மனிதரின் மேலான குணத்தையும் மதிப்பிட வேண்டியது மிகமிக அவசியம். இந்நிலைமை நீடிக்கப்படுவதால் தான் வாழ்வில் ஓர் அலாதியான கவர்ச்சி தென்படுகிறது.

கண்டனள்: பேசவில்லை.

ஐந்து வருஷங்கள் ஓடின யானைக்கவுனி மார்க்கெட்டில் ஒரு சிறுபையனுடன் ஒரு பெண் காய்கறி வாங்

குவதைக் கண்டாள். மார்க்கெட்டிலுள்ள பால்டைரியில் தினம் பால் ஊற்றுவது இவன் வழக்கம். அந்தப்பெண்ணை எங்கோ கண்டது மாதிரி யிருக்கிறதே என நினைத்தான். அவள் யாரென அவனால் அறிய முடியவில்லை. சில நாள் சென்றபின் இவன் சைக்கிளில் வந்தவுடன் அரையணா கொடுத்து அந்தச் சிறுவன் தினம் மார்க்கெட்டிற்கு வந்து பால் வாங்குவது வழக்கமாக்கிக் கொண்டான். பையன் மீது இவனின் கவனம் திரும்பியது. ஏதோ ஒரு கவர்ச்சி பையனிடம் இவனுக்கு ஏற்பட்டது. ஒருநாள் தம்பி! நீ யாரென்றான். என் தாய் சூளையில் இருக்குறாள், உன் தந்தையார்? அப்பா ஊரிலேயிருக்கிறாராம்! அவரை நான் பாத்ததில்லை என்றான். பையனிடம் மேலும் பேசி சில விவரங்களை சேகரித்தான். தகப்பன் தாய்க்கு பணம் அனுப்புவதில்லை யென்றும் கூலி வேலை செய்து ஜீவனம் நடத்தும் ஒருத்தியின் மகனென்பதும் நன்கறிந்தான்.

இடையில்.........

இடையில் சுகுணனின் தந்தை சந்துருவிற்கு நீரழிவு நோய் ஏற்பட்டது. நீரழிவு நோய் போக்குவதற்காக சென்னை சேர்ந்தார். சென்னைக்குக் குடும்பத்துடன் வந்த சந்துரு வேப்பேரி ஹைரோட்டில் வாடகை வீடொன்று பேசி அதில் அமர்ந்தார். தினம் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு நோய் போக்க செல்வது பழக்கம்.

நல்ல காலத்தின் தோற்றம்.

காலச்சக்கரம் கன வேகத்தில் சுழன்றது. ஒருநாள் கானமுகியுடன் பையன் வந்தான். கானமுகி சுகுணனைக் கண்டாள். இருவரும் ஒருவரை ஒருவர் அறியாதபடி கல்லாய் நின்றார்கள். கானமுகி அறிந்தாள் சுகுணனென்று. அய்யோ! நீங்களா? என்ன இந்தக்கோலமென்று அவள் உதடுகள் அசைய ஆரம்பித்தன. பின்பு... டைரியின் பின்புறத்திலுள்ள அறைக்குள் சென்றார். விருத்தாந்தம் தெரிந்து இருவரும் விசனத்தில் ஆழ்ந்தனர் அந்தச் சமயத்தில்.

கோமளம், ரஞ்சினி, தனம் மூவரும் பால்டைரி (பிராஞ்சுக் கடை)க்கு வந்து ஐபாவேப்பேரியிலுள்ள தன் வீட்டிற்கு தினம் காலையும் மாலையும் பாலூற்ற வேண்டுமெனச் சொன்னபோது பால் விற்குமந்த குமாஸ்தா சுகுணனைக் கூப்பிட்டுச் சொல்வதற்காக அவனை பெயரிட்டு அழைத்தார் சுகுணன் வந்தான். சுகுணனைத் தனம் கண்டு கண்மணி என்றழுதாள். ஓர் சோக நாடகம் அரங்கேறியது.

மாலை யாவரும் வீடேகினர் சுகுணன் கானமுகியை ஏற்றுக்கொண்டால் நான் தங்களுடன்—ரஞ்சினியுடனும் வாழச் சம்மதிப்பேன். இல்லை யெனில் இந்த வாழ்வே எங்களுக்குப் போதுமென்பேன்.

பாசவலை......... வேசிகள் விரிப்பது பாசவலை..... அந்த வலையில் வீழும் மானல்ல நானென்று கூறினீர்களே...... நான் விரித்தது பாசவலைதான்...... மோசவேலையல்ல... எவர் பொருளையும் தட்டிப் பறித்து உடலை ஒப்படைத்து உல்லாசம் பெற வேண்டுமென்றோ .....காசுக்காக கறை விற்று கனவாழ்வு வாழ வேண்டுமென்றோ...... நான் விரும்பியதில்லை...... விரும்பப் போவதுமில்லை...... என்பருவ நிலாவினிலே பண்மலர்காவிலே நன்னயமாகச் சொன்னாள் கானமுகி.

பாசவலைபற்றி தனம்

......அண்ணன் மகள் மீது ஆகாதப்பாசமுண்டு. பாசம் தேவை

தான். உரிமையைச் சொல்வதற்காக பாசத்தை வலேயாக வீசி என் மகனை சித்திரவதை செய்தேன். சொல்லொணு வேதனைகளுக்காளானேன். பாசம் தேவைதான். பாசமிகுதியால் ஒருவன் ஒருத்தி வாழ்க்கைக்கு உலே வைக்குமளவிற்கு என் உணர்வை அடகு வைத்தேன். முடிவில் தவறுணர்ந்தேன் திருந்தினேன்.

பாசவலே......ரஞ்சினி

ரஞ்சினி... எனக்கு உரிமையில்லே. அதனுல் பெற்ருேர்கள் பாசத்திற்கு நான் அடிமையானேன். பாசம்... வலேயாயிருந்து என் வாழ்வைக் கொலே செய்தது. எப்படியாயினும் அவரென் கணவர் நான் அவருக்குக் கட்டுப்பட்டவள் பாசவலே விரித்தென்னே பாதகமாக்கிவிட்டாரென்ற பெற்ருேர் என்ற என் கணவரின் அடிக்கடி உபதேசித்த வார்த்தைகளின் அர்த்தத்தை கானமுகியைக் கண்டபின்தான் அறிந்தேன்.

நளினி...

என் தவறுதலுக்கு மன்னிப்பில்லே. இன்று என் கையில் ஒரு குழந்தை கத்துகிறது, என் பாசத்தை வலேயாக மாற்ருமல் நயமாகக் காட்டியிருந்தால் கானமுகியால் என் குடும்பம் வாழ்ந்திருக்குமே!

ஜம்புநாதர்

மனேவி மீது நான் விரித்த பாசவலேயால் மகளே இழந்தேன்...... மகள் பிரிவும் குடும்ப வறுமையும் என் வாழ்நாளேக் குறைத்துக் கொண்டே வருகிறது.

கோமளம்

நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லே. விதியின்படி எல்லாம் நடக்குமென்ற மனப்பண்புடையவள் நான்.

சுகுணன்

பாசவலே என்ன என்பதை நன்குணர்ந்தவன் நான்... கொடிது... பெற்ருேர்கள் மீது நான் விரித்த பாசவலே...பிற சொல்ல விரும்பவில்லே.

சமூகம்

பாசத்திற்கும் உறவிற்கும் மாறுபாடு கிளம்புவது ஏனே? இன்றைய சமூகம் பயங்கரமானது. அது அழிய வேண்டும் அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்பொழுது ஜாதிகடந்த காதல் மணம் நடக்கும்

முடிவு

தந்தையார் சந்துருவிற்கு மெல்ல நோய் தீர்ந்தது. சொந்த ஊர் சென்ருர்கள்.

கானமுகிக்கும் சுகுணனுக்கும் இடையே காதல் நாட்கள் ஓடின. சுகுணனின் குழந்தையை வளர்க்கும் செவிலித்தாயானுள் ரஞ்சினி.

நளினிக்கும் ஜம்புநாதனுக்கும் சுகுணன் நிலத்தை குத்தகைக்கு அடைத்தான்குடும்பம் ஒற்றுமைஏற்பட்டது பன்மை வேற்றுமை அழிந்து ஒருமைப்பாடு தோன்றி ஒன்றே குலமென்ற உணர்வு கொண்ட கண்ணிகளடங்கிய பாசவலே விரிந்தது.

முற்றிற்று.

சொற்பயிற்சிக் கழகம், சூலூர்

1950 வருஷம் டிசம்பர்-மீ 10-உ மாலே 4 மணிக்கு ஷை கழகக்கூட்டம் 'கோவை முரசு' ஆசிரியர் S. A. மாணிக்கம் அவர்கள் தலேமையில் நடைபெற்றது. 'தற்கால நிலே' என்னும்பொருள்பற்றி தோழர்கள் S.N. அருணுசலம், R. S. மணியம், S. K. அழகப்பன், S. P. ரங்கசாமி, S. A. நாச்சிமுத்து, E. வேலுச்சாமி, S.A. குப்புசாமி ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். தலேவர் முடிவுரைக்குப் பின்னர் காரியதரிசி வந்தனம் கூற கூட்டம் இனிதுமுடிவுற்றது.

குமரன் மில்ஸ்

லிமிடெட்,

புதுப்பாளையம்—மேட்டுப்பாளையம் ரோடு,

கோயமுத்தூர்.

★

நாங்கள் 20, 40, 60. நெம்பர் பாவு நூல்

தயாரிக்கிறோம்!

இந்திய மூலதனம்-நல்ல டிவிடெண்ட்,

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்த

நிர்வாகம்.

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்,

N. அப்புசாமி நாயுடு & Co.,

மேனேஜிங் டைரக்டர்:—

G. V. முத்துசாமி B. Sc.

தனித் திருவிழா!

விருதை—ந. இராமசாமி.

பள்ளிக்கூடத்தில் வாரமொரு முறை நடக்கும் சொற்போர் கூட்டத்திலே ராஜு பேசுகிறனென்ருல் அமைதி நிலவிவிடும். ராஜுவின் பேச்சின் மூச்சிலே அன்னியர்கள் பஞ்சாய் பறக்க நேரிடும். இவ்வளவு ஏன்? கூட்டத்தில் அரசியலைப்பற்றி அவன் பேசக்கூடாது என்று தலைமை ஆசிரியர் நாராயண ஐயங்காரின் 144 தடை உத்தரவு இருந்ததென்ருல் அவனுடைய பேச்சு வன்மையைச் சொல்லவேண்டுமா?

பேச்சு வன்மையில் மட்டுமா ராஜு கெட்டிக்காரன்? இல்லவே இல்லை! நடிப்புக்கலையிலும் தேர்ச்சிபெற்றவன்.

கடந்த ஆண்டு பொங்கல் திருவிழா! ஏழ்மை இருள் நீங்கி, நல்லுணர்வு கூடி, கூடும் தமிழர்களின் பெருவாழ்வில் மிகுந்த இன்பத்தின் எழுச்சிக்கு எடுத்துக்காட்டு பொங்கல் விழா! இவ்விழாவை ஒட்டி எங்களூர் உயர்நிலைப் பள்ளியில் விழா நடைபெற்றது இரவிலே ராஜுவினல் எழுதப்பட்ட 'தனித்திருவிழா' என்ற நாடகம் அரங்கேற்றம் அவனும் நடிக்கிருன்! கேட்கவேண்டுமா? ஆண்களும், பெண்களும் பந்தலில் கூடி விட்டனர்.

ராஜு பெண் வேடம் கட்டினன். அவனுக்கு அந்த வேடம் வெகு கச்சிதமாய் அமைந்திருந்தது. நாடகம் ஆரம்பமாயிற்று காட்சிகள் மளமளவென்று ஓடின. ராஜுவின் நடிப்பு இமயத்தின் உச்சியை எட்டிற்று. கடலின் ஆழத்தைவிட அதிக தூரஞ்சென்றது. மேகங்களைக்கிழித்து செல்லும் மின்னலைப்போல இடைஇடையே கைதட்டலும், ஆரவாரித்தலும் எதிரொலித்தன.

ஏழாவது காட்சி நடந்துகொண்டிருந்தது. ராஜுக்கு இரண்டு சீன்கள் ஓய்வு இருந்தன. நாடக மேடையில் ஓர்

ஒதுக்குப்புறத்தில் நின்று கொண்டே மற்றவர் நடிப்பில் கவனம் செலுத்தியிருந்தான் அவன். அவன் தோள்மீது ஒரு கையை வைத்து அவன் மேல் சாய்ந்தது ஓர் உருவம். மெதுவாகத்திரும்பிப்பார்த்தபோது தன் மீது மெய்மறந்து சாய்வது தலைமையாசிரியர் ஐயங்காரின் புதல்வி மதுரவல்லி என்பதை அறிந்து கொண்டவன் ஆடாமல் அசையாமல் நின்றான்.

ஏதோ ஒரு புதுவிதமான உணர்வு அவனைக்கவ்வுவது போல இருந்தது. உடலுணர்வு அவனை உலுக்கிற்று. இவனும் மெதுவாக தன் கையால் மதுரவல்லியை தடவிக் கொடுத்தான். திடுக்கிட்டுத்திரும்பிப்பார்த்தாள் அவள்! தன் தோழி என்று எண்ணி தவறுதலாக ராஜூமீது சாய்ந்திருந்தாள். 'களுக்'கென்று சிரித்துவிட்டு ஓடிவிட்டாள். ஏன்? இன்னும் சற்று நேரம் இப்படியே இருக்கக் கூடாதா என்று ஏங்கினன். அவள்தான் மின்னல் வீச்சு போல் மறைந்துவிட்டாளே!

அதிலிருந்து ராஜூ பெண்கள் தங்கும் அறையை தினந்தோறும் பத்துத்தடவைகளுக்குக்குறையாமல் வலம் வருவான். கமலா, மேரி, பிளாரன்ஸ், கிளாரா, லீலா, சீதா இன்னும் எத்தனையோ பெண்கள் தங்கள் தளுக்கு உடலையும், குலுக்கு நடையையும், வெட்டும் கண்களையும் காட்டி ராஜூவை மயக்கப்பார்த்தார்கள். அவர்களுக் கெல்லாம் அவன் புகழ் மீது காதல். ஆனல் மதுரவல்லி யின் மயக்கு விழிகளுக்கு முன்னிலையில் மண்டியிட்டான் ராஜூ.

சூரியனும், சந்திரனும் தனித்தனியே இருந்தாலும் சூரி யனின் ஒளி சந்திரனுக்குப்பாய்ந்து பிரகாசிப்பதுபோல மதுரவல்லியின் காதல் ராஜூவுக்கு உயிரூட்டியது.

காதல் என்ன சாமான்யமானதா? கடிதங்கள் பறக் கலாயின! கடிதம் மாத்திரமா? இல்லை கடவுள் பெயரைச் சொல்லி கோவிலுக்குச்சென்று கடவுளைப்பின்பற்றியோ என்னவோ 'திருவிளையாடல்' புரிந்தது என்னவோ உண் மையே!

"என் மகள் அடுத்த இனத்தவனை மணக்கவா, அதன் பொருட்டு அபகீர்த்தி ஏற்கவா" என்று ஐயங்கார் துடியாய் துடித்தார்! "அதுவும் தாழ்த்தப்பட்ட பறையனையா? என் மகள் விரும்புவது?" என்று மனம் நொந்தார். நன்முறை

யில் மதுரவல்லிக்கு நல்லது நவின்றூர் மறந்து விடு என்று. மனம் தளராத மதுரவல்லியை மாமன் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார் ஐயங்கார்.

வாழ்க்கை என்பது கசக்குமா. புளிக்குமா, துவர்க்குமா, அல்லது இனிக்குமா என்று இருவரும் அறியவில்லை. ஆனல் பிரிந்தனர். ராஜு பள்ளியை விட்டு நீக்கப்பட்டான் ஐயங்காரின் சூழ்ச்சியால். மாதங்கள் சில சென்றன.

மதுரவல்லி புதூரில் தன்மாமன் வீட்டில் கரடுமுரடான வாழ்க்கை நடத்திவந்தாள் மதிபோன்று மிளிர்ந்தஅவள் முகத்தில் மகிழ்ச்சிக்குறியில்லை!

புதூரில் அன்றெரு பொதுக்கூட்டம். அக்கூட்டத்தில் ராஜு பேச வருகிருன் என்று கேள்விப்பட்டாள் அவள். மாமனுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு பொதுக்கூட்டத்திற்கு வந்து விட்டாள்.

அன்று ராஜு நெஞ்சுருகப்பேசினுன். கூட்ட முடிந்தவுடன் அவனைச்சந்தித்தாள்! யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் இருவரும் கிளம்பி விட்டனர்.

'மதுரவல்லி மறைந்தாள்' என்ற செயதி கிடைத்தவுடன் ஐயங்கார் துடியாய்த்துடித்தார்? இதயம் வெதும்பினுர்.

சில நாட்களுக்குப்பின்னர் "ஐயங்கார் அம்மணிக்கும்-தாழ்த்தப்பட்ட தோழருக்கும் திருமணம்! பிரபல கலப்பு மணம்" என்றெல்லாம் செய்திகள் வந்தன! மதுரவல்லியை ராஜு மணந்துகொண்டான் மனமார!

"இப்படியே நம்ம ஆத்துக்குட்டிகளெல்லாம்—கீழ்ச் சாதிக்காரனேடு ஓட ஆரம்பிச்சுட்டா அப்புறம் நம் குலம் என்ன ஆறது" என்ற கூக்குரல் அக்ரஹாரக்கோட்டைக்குள் எழுந்தது. துணிந்து வெளிவந்த இந்த இருவரையும் தீர்த்துவிட்டால் மற்றவர்களுக்குப்புத்தி கற்பிக்கலாம் என்று ஐயங்கார் எண்ணினுர்போலும்

அன்று தைத்திங்கள் முதலாம்நாள்! பொலிவுற விளங்கும் பொங்கல் திருநாள் எங்கும் விழாவின் எழுச்சியே மீறிட்டது.

காவலூர் கிராமம். குளிர் நிறைந்த மரத்து நிழலில் மதுரவல்லி தன் குழந்தையைத் தொட்டிலிட்டு ஆட்டிக்

கொண்டு நின்றாள். பக்கத்திலே அடுப்பிலிருக்கும் பானையில் சக்கரைப் பொங்கல் வேகிறது. ராஜு கரும்புக்கட்டொன்றைத்தூக்கிக்கொண்டு வயல் கரையில் நடந்து வருகிறான்.

ஓடிவந்து—மதுரகீதம்பாடி—பொங்கல் விழா கொண்டாடிக்குதூகலிக்கும் மதுரவல்லியையும், ராஜுவையும்—தூரத்திலே நின்று இமையாது பார்த்துக்கொண்டு நின்ற ஐயங்கார் அவ்விருவரின் 'தனித்திருவிழா' வாழ்க என்று மனதுக்குள்ளே வாழ்த்தியவாறு திரும்பிச்சென்றார்!

பொங்கல் பொங்குக!

காங்கிரஸ் ஸ்தாபனம் இனி எதற்கு ?

காங்கிரஸ் இன்று ஆட்சிக்கு வந்துவிட்டால் தனியாக ஓர் ஸ்தாபனம் அவசியமா?

ஏன்? அதை கலைத்துவிடக்கூடாதா?

அடுத்துவரும் தேர்தலுக்கு ஆக்கம் தேடுவதற்கா?

புனிதமான ஸ்தாபனத்தின் பெயரைச்சொல்லி பணம் சம்பாதிக்கவா?

—முன்பு காந்திஜி கூறியது,

திரு. K. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

கோவை K. R. & Sons கம்பெனியின் உரிமையாளர் K. R. ராதாகிருஷ்ணன் அவர்கள் வியாபாரத்திலுள்ள நுணுக்கங்களை ஆராய்ந்துவர சிலோன் முதல் கடல் கடந்த நாடுகளுக்கு சென்றுள்ளார். அனேகமாக இம்மாதம் 15 தேதிக்கு மேல் கோவை வந்து சேருவார் எனத்தெரிகிறது.

திருந்துவாரா ?

கோவை C. S. & W. மில்லில் காஷியர் வேலை பார்க்கும் திரு. பரமேஸ்வர ஐயர் என்பவர் ஆரம்பத்தில் அதே மில்லில் ரூ. 37½ சம்பளத்திற்கு சாதாரண குமாஸ்தாவாக வேலைக்கு வந்தார். ஆனால் இன்று மாதம் ரூ. 300 சம்பளம் பெருவதோடு, லக்ஷக்கணக்கான சொத்தும், சொந்த பங்களாவும் எப்படி வந்தது பற்றியும் மில்லுக்கு வரும் வியாபாரிகளிடமும், மற்றும் பலரை எப்படி பேசி நடத்துகிறார் என்பது பற்றியும், அடுத்த முரசில் விளக்கமாக எழுதுவோம். அவர் திருந்துவாரா?

(ந. கி.)

தென்னிந்தியாவில் புகழ் பெற்ற

பல்லடம் குயில் மார்க் பீடிகள்

உபயோகத்திற்கு உகந்தது
குணத்தில் சிறந்தது
குயில் மார்க்கென
கூவு குயிலே

குணத்திலும் சுவையிலும்

மணத்திலும் சிறந்தது

Prop: P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்டு.— K அய்யாசாமி செட்டியார் திருப்பூர்
அமீர் சாயபு, உடுமலைப்பேட்டை.
K மம்முசா சாயபு, காங்கயம்
S நடராஜ முதலியார், அவினுசி
A K யாகூப் சாயபு, பொள்ளாச்சி
M பழனிச்சாமி ரங்கே கவுடர், வீதி
கோயமுத்தூர்.

பால்யநடிகன்

R. பாலகிருஷ்ணன்

பால்ய நடிகனுன R. இராமகிருஷ்ணன், கஞ்சன், பொன்முடி, கிருஷ்ண விஜயம், முதலிய படங்களில் தன் வயதிற்குமேல் திறம்பட நடித்துள்ளான். வரப்போகும் புதிய படமான ராணியிலும் தோன்றுகிருன். ரசிகர் உள்ளத்தை கொள்ளேகொண்ட இப்பால்ய நடிகன் எதிர்காலத்தில் சிறந்ததொரு நட்சத்திரமாவானென எதிர்பார்க்கிறேம். போதியதிறமையுடைய இப்பால்யனைப் படமுதலாளிகள் நன்கு பயன் படுத்திக்கொள்வாராக!

முகவரி: R. இராமகிருஷ்ணன், S/o R. சுந்தரராஜு
C/o ஜுபிடர் பிக்சர்ஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

★ **பொங்கல் வாழ்த்து.** ★

நம்பிக்கை! நாணயம்!! நீடித்த உழைப்பு!!!

உறுதியோடும் நாகரீக வேலைப்பாடும் அமைந்த அலுமோனிய பாத்திரங்களுக்கு கோவையிலே தலைசிறந்த இடம்.

மில், கேன்டின்களுக்கு தேவையான எல்லா செட் சாமான்களும் உண்டு, மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

கந்தசாமி & Co.,
அலுமோனிய வியாபாரம்,
ரங்கே கவுண்டர் வீதி, கோயமுத்தூர்.

திருமணம், மற்றும் விசேஷங்களுக்கும்,

தேவையுள்ள பெனரஸ், பெங்களூர், காஞ்சீபுரம்

பட்டுப் புடவைகள்

உன்னதமான புத்தம் புதிய டிசைன்களில் ஆயிரக்கணக்கான
தினுசுகள் ஏராளமாய் வந்துள்ளன.

வெண்பட்டு, வேஷ்டி, துப்பட்டாக்கள் இன்னும் மற்ற
ஜவுளிகளும் நிறைய வந்துள்ளன.

நியாயமான விலைகள்! நாணயமான சரக்குகள்!!

தேவைக்கு விஜயம் செய்து திருப்தியடையுங்கள்.

கரணு ஜவுளி மாளிகை,

ராஜ வீதி, கோயமுத்தூர்.

SRI RAMA LAKSHMANA MILLS,

PODANUR—COIMBATORE.

ஸ்ரீ ராம லக்ஷ்மண மில்ஸ்,

லோகநாதபுரம், போத்தனூர்.

நல்லதோர் கம்போடியா பருத்தி விதையும்,
விதை விதைக்க சுத்தமான கருங்கண்ணி பருத்தி
விதையும் நயமான விலையில் நாங்கள் தருகிறோம்.
உபயோகத்திற்குகந்த, குணம், மணம், மிகுந்த
கடலை எண்ணெயும், தெளிவான தேங்காய்
எண்ணெயும், பருத்தி விதை, கடலைப் புண்ணாக்கும்
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

★

விபரங்களுக்கு:–

M. S. தங்கவேலு,
2/280 லோகநாதபுரம்—போத்தனூர்,
கோயமுத்தூர்,



சாண்டோ M. M. A. சின்னப்பா,

ராமனுதபுரம் கோவை

திரு சின்னப்பா அவர்கள் ராமனுதபுரம் வீர மாருதி தேகப் பயிற்சி சாலேயின் ஆசிரியர். இவர் நாடகம் சினிமா இவ்விரண்டிலும் திறம்பட நடித்துப் புகழ்பெற்றவர். நல்ல உடற் கட்டு உடையவர். ஸ்டண்ட் நடிப்புப் பழகுவோர் இவர்பால் பயிற்சி பெறின் பலனுண்டு. ராஜகுமாரி, மோகினி, விஜய குமாரி, மர்மயோகி, ராணி முதலிய படங்களில் தோன்றுகிறார். சிறந்த நடிகரும். உடற்பயிற்சி ஆசிரியருமான திரு சின்னப்பாவை சினிமாக் கலே ஞர்கள் நன்கு பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

விபரங்களுக்கு:-

திரு. M. M. A. சின்னப்பா,

ஆசியர், விர மாருதி தேகப்பயிற்சி சாலே,

ராமனுதபுரம், **கோயமுத்தூர்.**

கோவை மக்களின் அமோக வரவேற்பு.

★ கோவை மக்களின் அமோக ஆதரவுபெற்று அன்றாட வாழ்க்கையிலே சதா உலாவிக்கொண்டிருக்கும் ஓர் பெயர்!

★ மின்னல் வேகத்திலே நிவாரணமளித்து மனே உற்சாகத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கும் ஓர் பெயர்!!

—சோறல்—

(சர்மரோக நிவாரணி)

எப்பொழுதும் சமயசஞ்சீவியாகயிருந்து உங்களுடைய தேகாரோக்கியத்தைப்பாதுகாக்கத் தயாராயிருக்கிறது.

தயாரிப்பவர்:- பாரத் டிரக் ஹவுஸ், மதுரை.

மணீஸ் கபே

போர்டிங் & லாட்ஜிங்,

: மதுரை. :

★ பிரயாணிகள் தனிப்பட்டு தங்குவதற்காயினும் சரி.
★ குடும்பத்துடன் தங்குவதற்காயினும் சரி
★ சுவையுள்ள சுகாதார உணவுகளை அருந்துவதற்கா யினும் சரி.
★ குளித்தல் முதலிய உடலாரோக்கிய வசதிகளுக்கா யினும் சரி.

மதுரையில் மணீஸ் கபே முதன்மையானது

K. S. N. அய்யர்,

உரிமையாளர் மணீஸ் கபே,

5 டவுன் ஹால் ரோடு, மதுரை.

டால்மியா **சிமெண்ட்**

1 டன் வரை பர்மிட் இன்றி கிடைக்கும்.

காகித மூட்டை 1-க்கு ரு ... **3—12—0**

சாக்கு மூட்டை 1-க்கு ரு ... **4— 8—0**

227 ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

7/50 காந்திபுரம், 3/54 இராமனுதபுரம்.

டால்மியா பிராண்டை கவனித்து வாங்கவும்

டால்மியா சிமெண்டு ஸ்டாக்கிஸ்ட்.

பெயர் மாறுதல்

கோயமுத்தூரில் நிறுவப்பெற்று இதுநாள் வரை ஜீவிய இன்ஷ்யூரன்ஸ் மட்டும் செய்து வந்த

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி லிட்.,

கம்பெனி

மற்ற எல்லாவித இன்ஷ்யூரன்சும் செய்ய விதிகளைத்திருத்தி, பெயரையும்,

இந்தியா லைப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி லிட்

என்று மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தியன் கம்பெனீஸ் சட்டத்தின் கீழ், பெயர் மாறுதலுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதியும், கோயமுத்தூர் ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனீஸ் உதவி ரிஜிஸ்திராரிடமிருந்து சர்டிபிக்கேட்டும் அளிக்கப்பட்டிருப்பதுடன், சொசைடியின் விதிகளில் திருத்தத்திற்கு சென்னை ஹை கோர்ட்டாரின் சம்மதமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ *T. A.* ராமலிங்கம் செட்டியார் *B. A., B. L., M. P.* சேர்மன்.
ஸ்ரீ *M. S.* பழனியப்ப முதலியார். *B. A.,* மானேஜிங் டைரக்டர்,
ஸ்ரீ *C. R.* சிவசுப்ரமணியம் *B. A.,* செக்ரெடரி.

கோவை முரசு வெளியீடுகள்.

விரைவில் வெளிவரும் எதிர்பாருங்கள்!

நமது "கோவை முரசில்" தொடர்ந்து (ஆசிரியை) அவர்களால் எழுதப்பட்டு வந்த,

"பாசவலை"

என்னும் தொடர் கதை புத்தக வடிவில் பொலிவுடன் வெளிவரும்.

தனிப்பிரதி விலை. 0-8-0

ஆரம்பக் கல்வி ஓங்கவேண்டுமானல்?

நமது முரசு ஆசிரியர் [தோழன்] அவர்களால் எழுதப்பட்டது.
(வார்தா கல்வித்திட்ட ஆராய்ச்சியுடன்)

தனிப்பிரதி விலை. 0-8-0

"இதற்கா எங்கள் தியாகம்"

நமது ஆசிரியர், (தோழன்) அவர்களால் எழுதப்பெற்றது.

தனிப்பிரதி விலை. 0-4-0

விபரங்களுக்கு:-

பாலு பதிப்பகம், சூலூர். P. O. கோவை ஜில்லா

பொங்கல் புத்தாண்டில்

12" x 10"

அளவுள்ள என்லார்ஜ்மெண்ட்

5/-

15-12-50 முதல் 31-1-51 வரையில்

R. தாஸன் ஸ்டுடியோ

ராஜா மஹால் பில்டிங்ஸ்,
ஒப்பணக்கார வீதி, கோவை.

Wire: "WOODLANDS" Phone: 373 A.

WOODLANDS HOTEL

PROBLEM SOLVED AT COIMBATORE.

Please visit our New Residential Hotel

at the Art's College Road,

COIMBATORE.

(South India)

Rooms with Attached Baths

and Modern Sanitation.

★ **COTTAGES**

★ **FAMILY ROOMS**

★ **SINGLE ROOMS**

Fully Furnished, Aire and self Contained.

அநேக விதமான கடிகாரங்கள்
டைம்பீசுகள் சுவர் கடிகாரங்கள்
... ஏராளமாக வந்துள்ளன ...



கடிகார ரிப்பேர் குறைந்த சார்ஜில் செய்து கொடுக்கப்படும். கடிகாரங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான பாகங்களும் எங்களிடம் எப்பொழுதும் ஸ்டாக் உண்டு.

P. K. மீரான் அண் கோ.,

பெரிய கடை வீதி :: கோயமுத்தூர்.

Telephone: 2894. Grams: EVEREST.

HOTEL EVEREST

(PROPRIETOR: S. K. SUNDARAM J. P.)

1 & 2, Poonamalli High Road, MADRAS.

MOUNT EVEREST
The Peak of Perfections.

HOTEL EVEREST
The Perfect Boarding & Lodging House

Situated between Madras Central & Egmore Station and on Bus, Train, Electric Train Route. Well Ventilated 130 Airy Rooms.

Our Branch:

Luxury Type HOTELD, MADRAS.

ஸ்ரீ தேவி துணை.

ருசி மிகுந்த பதார்த்தங்களுக்கும், ★

★ டீ பார்ட்டி ஆர்டர்களுக்கும்,

சிறந்த இடம். ★

பாரத் ரெஸ்டாரண்ட்

மில் ரோடு, ஒப்பணக்கார வீதி கார்னர்
கோயமுத்தூர்.

அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யக் கோருகிறேன்.

Pro: K. R. V. Rao

"ஷெல் சைனு"

உயர்தரமான சானிடரி பிட்டிங்குகளுக்கும் மற்றும் ஹோட்டல்களுக்குத் தேவையான டீ செட்டுகள், பிலேட்டுகள், கிண்ணங்கள், மற்றும் எல்லாரக சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்;-

தி இந்தியன் இண்டஸ்ட்ரீஸ் ஏஜன்ஸி

94 ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

For Buying, Selling, and Exchanging,

Consult:—

MINERVA TRADING CORPORATION,

251, OPPANAKARA ST., COIMBATORE.

Dealers in:—

ECKO, AND PILOT RADIOS,

GUARANTEED AND EXPERT SERVICE.

20 ஆண்டுகளாக புகழ் பெற்றது!

அம்ருஸ்யா தேயிலை

நாவிற்கு ருசியும், நல்ல மணமும்

சுவைதரும் தேயிலையிதுவே

மலபார், மேங்களூர், ஹுப்ளி, பெல்காம்,

கெடாக், ஆல் இந்தியா முழுவதும்

வியாபாரம் நடைபெறுகிறது.

அம்ருஸ்யா (இந்தியா) டீ எம்போரியம்.

P. B. No. 188. திருச்சி ரோடு,

கோயமுத்தூர்.

Prop:- M. N. சங்குண்ணி,

மாடர்ன் இங்கிலீஷ் பேக்கரி,

பொள்ளாச்சி.

பீடிகளின் கோமான் கோபால் மார்க் பீடியே!!

குணத்தில் சிறந்தது கோபால் பீடி!
மணத்தில் மிகுந்த கோபால் பீடி!!
தமிழ் நாட்டில் இணையில்லாக் கோபால் பீடி!!!

புகழ் பெற்றது

கோபால் பீடி!!!!

★

சிகரெட் பிடிப்போர் அவசியம் உபயோகிக்கத்தக்க குணமுடையது,

உரிமையாளர்:-

A. K. அஜீஸ் சாயபு,
கோபால்பீடி பேக்டரி,
மங்கலம் ரோடு, பல்லடம்.

ஏஜண்டுகள்:—

ஜனுப் K. தஸ்தகீர் சாயபு, தாராபுரம்.
,, K. முகமதுஷா சாயபு, காங்கயம்.
,, U. A. பாச்சாமியா சாயபு, உடுமலைபேட்டை.
,, P. N. பீர்முகமது சாயபு, பழநி.

பொதுமக்களே! உஷார்!!

கோவை டவுன் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொது மக்களே! உஷாராயிருங்கள்! பஸ்ஸில் திருடர்கள் பிரயாணம் செய்கிறார்கள். திடீரென மணிபர்ஸ்சுகள் மாயமாய் மறைந்துவிடுகின்றன போலீஸ் அதிகாரிகளும் உடன் பிரயாணம்தான் செய்கிறார்கள். முறையீட்டை கவனிப்பாரில்லை. திருட்டுபோனதை தேடுவாரில்லை. மவுனம் சாதிக்கிறார்கள். காரணம் யாதோ? நாமறியோம்! —ஆசிரியர்.

காலை, மாலை, சிற்றுண்டியும், நல்ல முறையில்

டீ & காப்பியும்

மாடர்ன் டீ & காப்பி ஓட்டல்

புதுமார்க்கெட், கோவை.

சுவைதரும் உணவும்

சுத்தமான பதார்த்தங்களும் நாவிற்கினிய முறையில் நாங்கள் தருகிறோம்.

Prop:- P. தனவேல் பிள்ளை

C. V. T. நாயுடு,

பிரியாணி & சாப்பாடு ஓட்டல்.

ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

கோவையிலே சிறந்த பிரியாணி ஓட்டல்

இதுஒன்றே!

நாவிற்கு ருசி, நல்ல மணமுள்ள பதார்த்தம்,
சுகாதார முறைப்படி சுவைதரும் உணவு விடுதி.

Pro:- இராமையா நாடார்

Editor & Published by S. P. Meenashi Ammal Sulur. Printed by K. Ramanathan Chettiar, at his Kathiresan Press, Coimbatore.
Mg. Editor: S. A. Manickam.

வால்பாரை & பல்லடம்
தென் இந்திய ரெயில்வே அவுட்ஏஜன்சிகள்

பொள்ளாச்சி—ஆனைமலை
பஸ் டிரான்ஸ்போர்ட் லிமிடெட்
கம்பெனியார்

★

★ பொள்ளாச்சி ரெயில்வே ஸ்டேஷன் வழியாக வால்பாரைக்கும்,

★ திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷன் வழியாக பல்லடத்துக்கும் அவுட் ஏஜன்சி சர்வீஸ்களை நடத்துகிறார்கள் என்று பொதுமக்களுக்கு அறிவிக்கிறோம்

★ இதர எல்லா ரயில்வே ஸ்டேஷன்களுக்கும், ரெயில்வே அவுட் ஏஜன்சிகளுக்கும், பிரயாணிகள் லக்கேஜ்கள், பார்சல்கள், கூட்ஸ்கள் முதலியவைகளுக்கு நேராக ரெயில்வே புக்கிங் வசதிகள் உண்டு.

P. நாச்சிமுத்துக் கவுண்டர்.
ஜெனரல் மானேஜர்.

ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் லிட்.,
பொள்ளாச்சி.



ஸ்ரீ கதிரேசன் அச்சகம், கோவை.